1. இந்நகராட்சியில் 2020-2021-ஆம் ஆண்டு திட்டப் பணிகளுக்கு (SCHEME ONLY) ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (E-Tender) மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் விளம்பரம் செய்ய தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களுக்கும், பொதுவான நகராட்சியின் விளம்பரங்கள் செய்யும் கட்டணம் அந்தந்த நிறுவனத்திடம் வரப்பெறும் பட்டியல் தொகைகள் வழங்க தோராய செலவினம் தொகை ரூ.10,00,000/-யை பொது நிதி 2020-2021-ஆம் ஆண்டு நிதியின் கீழ் செலவு செய்துக்கொள்ள மன்றப் பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.404/2019/இ1.

2. இந்நகராட்சி பொது நிதி 2020-2021-ஆம் ஆண்டு நிதியின் கீழ் வார்டு எண்.1 முதல் 36 வரையிலுள்ள வார்டுகளில் பராமரிக்கப்படும் 2969 எண்ணிக்கை தெரு மின்விளக்குகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய தேவையான மின்சார உதிரிபாகங்கள் சப்ளை செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3123/2020/இ2.

3. வாணியம்பாடி நகராட்சி பொது நிதி 2020-2021-ஆம் ஆண்டு நிதியின் கீழ் வார்டு எண்.36 திருமர்ஞசோலை சுடுகாட்டில் உள்ள வடக்கு பகுதியில் சுற்றுச்சுவர் பழுதடைந்துள்ளதால், அதனை உடைத்து அப்புரப்படுத்திவிட்டு புதியதாக வடக்கு பக்கம் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.6.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3250/2020/இ1.

4. இந்நகராட்சி மூலம் ஆணையர், பொதுப்பிரிவில் பயன்படுத்தி வரும் ஈப்பு வண்டி எண்.TN 23 BR 1756 Scorpio Jeep-க்கு பழுது ஏற்பட்டுள்ளதால் பழுதுகளை நீக்கம் செய்யவும், புதியதாக 5 Bridgestone டயர்கள் மாற்றம் செய்யவும், அனுமதிக்கப்பட்ட ஜெயின் கார்ஸ் மற்றும் ஆட்டோ

சேல்ஸ் பி.லிமிட்., வசூர், வேலூர் நிறுவனத்தில் ஒப்படைப்பு செய்யவும், அதற்கான தொகையினை 2020-21-ஆம் ஆண்டு

வருவாய் நிதியில் செலவு செய்துக்கொள்ளவும், ஆணையர் பயன்படுத்தும் ஈப்பு என்பதால் நகராட்சி பகுதியில் ஆய்வு பணிகள் மேற்கொள்ள தேவைப்படுவதால், அனுமதிக்கப்பட்ட மேற்கானும் நிறுவனத்தில் ஒப்படைப்பு செய்து பழுது நீக்க பணிகள் மற்றும் புதியதாக 5 Bridgstone டயர்கள் மாற்றம் செய்யவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3184/2020/இ1.

5. இந்நகராட்சி குடிநீர் நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியின் கீழ் கொடையாஞ்சி தலைமை நீரேற்று நிலையம், இராமையன் தோப்பு நீர்உந்து நிலையம் மற்றும் வாரச்சந்தை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குளோரினேஷன் யூனிட்டுகளுக்கு பிளிச்சிங் கரைசல் (sodium Hypochlorite solution) திரவ முறையில் சப்ளை செய்தல் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரு.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3124/2020/இ2.

**6.** உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை வேலூர் அவர்களின் கடிதம் ந.க.எண். **713/2020/**அ**2** நாள் **17.11.2020–**இல் வாணியம்பாடி நகராட்சியின் **2019–2020–**ஆம் ஆண்டு கணக்கின் மீது உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை மூலம் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. **2019–2020–**ஆம் ஆண்டு தணிக்கை தடை பத்தி எண்.**58–**ல் **2019–2020–**ம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ.**74797/–**ஐ கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே பொது நிதியிலிருந்து தணிக்கை கட்டணம் ரூ.**74797/–**ஐ அரசு கணக்குத் தலைப்பில் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.: மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.**1999/2018/**அ**4**

7. இந்நகராட்சியில் புரட்சி தலைவி அம்மா விபத்து காப்பீட்டு திட்டம், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு பயன்பெறும் வகையில் செயல்படுத்திட, இணையதளத்தில் பயனாளிகளின் படிவங்கள் பதிவிறக்கும் செய்து பிரிண்டுகள் எடுப்பதற்கு போதிய டோனர்கள் இருப்பில் இல்லை. எனவே புதிதாக (No.728) எண்ணிட்ட டோனர் - 40 எண்ணம் மற்றும் (No.255S) டோனர் - 10 எண்ணம் வாங்கப்பட வேண்டும். எனவே புதிதாக மேற்கண்ட டோனர்கள் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.2,31,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2982/2020/இ1.

8. இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள ஈப்பு வாகனம் எண்.TN 23 B 8721 Bolero Jeep-க்கு இன்ஜின் ஆயில் மற்றும் பழுதுகளை நீக்கம் செய்ய வேண்டுமென ஓட்டுநரின் 10.12.2020-ம் தேதிய அறிக்கையில் தெரிவித்துள்ளார். எனவே ஈப்பு வாகனம் ஆய்வுகளுக்கு செல்ல தேவைப்படுவதால், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான மகேந்திரா ஜெயின் கார்ஸ் மற்றும் ஆட்டோ சேல்ஸ் பி.லிமிட்., வசூர், வேலூரில் ஒப்படைப்பு செய்யவும், அதற்கான செலவுத் தொகையினை பொது நிதியில் செலவு செய்துக்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3278/2020/இ1.

9. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2020-21-ஆம் ஆண்டு நிதியில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டதில் 01.12.2020-ந் தேதியன்று பெறபட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.21 ◦ நுருல்லாபேட்டை, சி.என்.ஏ சாலையில் உள்ள நகராட்சி சமுதாய கூடத்திற்கு சுற்றுச்சுவர் மற்றும் மழைநீர் கால்வாயுடன் சிறுபாலம் அமைத்தல் பணி. | 9.00 | 1) பி. மணி | மதிப்பீட்டு தொகையை விட 0.30% குறைவு |
| | | | 2) வி.பி. முருகன் | மதிப்பீட்டு தொகையை விட 0.50% அதிகம் |
| 2 | வாணியம்பாடி நகராட்சி ◦ சி.என்.ஏ சாலையில் இரயில்வே கிராஸ் அருகில் | 6.00 | 1) பி. மணி | மதிப்பீட்டு தொகையை விட |

| | | | | |
|---|---|---|---|---|
| | வடக்கு பகுதியில் உள்ள நகராட்சி சமுதாய கூடத்திற்கு சுற்றுச்சுவர் மற்றும் மழைநீர் கால்வாயுடன் சிறுபாலம் அமைத்தல் பணி. | | | 0.20% குறைவு |
| | | | 2) வி.பி. முருகன் | மதிப்பீட்டு தொகையை விட 0.50% அதிகம் |

அ.கு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்காணும் பணிக்கு 01.12.2020-ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளி ஏற்று தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1602/2020/இ1.

10.பொது நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியின் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டதில், 17.12.2020-ஆம் தேதியன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வாணியம்பாடி நகராட்சி டி.வி.ஜி. (விரிவாக்கம்) நகர் பூங்காவில் யோகா மையம் அமைத்தல் பணி. | 15.00 | 1) ஜி.என்.விஜயசீனிவாசன் | மதிப்பீட்டு தொகையை விட 0.50% குறைவு |
| | | | 2) எஸ். சுந்தரேசன் | மதிப்பீட்டு தொகையை விட 1.10% அதிகம் |
| 2 | வாணியம்பாடி நகராட்சி டி.வி.ஜி. (விரிவாக்கம்) நகர் பூங்காவில் திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம் அமைத்தல் பணி. | 10.00 | 1) ஜி.என்.விஜயசீனிவாசன் | மதிப்பீட்டு தொகையை விட 0.30% குறைவு |
| | | | 2) எஸ். சுந்தரேசன் | மதிப்பீட்டு தொகையை விட 1.20% அதிகம் |

அ.கு : 1) பொது நிதி 2020-21-ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்காணும் பணிக்கு 17.12.2020-ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2949/2020/இ1.

11. வாணியம்பாடி நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 36 வரையுள்ள பகுதிகளில் தினமும் குடிநீர் விநியோகம் செய்வதற்கு கொடையாஞ்சி மற்றும் இராமையன் தொப்பு நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் உரிஞ்சப்பட்டு நகரில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் இதன் மூலம் அவ்வப்போது ஏற்படும் நீர் கசிவு மற்றும் குழாயில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரி செய்து பராமரிப்புக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரு.9.90 இலட்சத்தை நகராட்சியின் குடிநீர் நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 3321/2020/இ2.

12. வாணியம்பாடி நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 36 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள ஆழ்துளை கிணறுகளுடன் கூடிய நீர்தேக்க தொட்டியின் மூலம் குடிநீர் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இதன் மூலம் அவ்வப்போது ஏற்படும் ஆழ்துளை கிணறுகளில் உள்ள மின்மோட்டார், கேபிள் மற்றும் பைப்புகளில் ஆகிய பழுதுகளை உடனடியாக சரி செய்து பராமரிப்புக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரு.9.90 இலட்சத்தை நகராட்சியின் குடிநீர் நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 3321/2020/இ2.

13. வாணியம்பாடி நகராட்சியில் வார்டு எண்.1 சவுக்கு தோப்பு அருகில் மற்றும் பெரியபேட்டை பள்ளி எதிரில், வார்டு எண்.4 காளியம்மன் கோயில் அருகில், வார்டு எண்.5 சென்னாம்பேட்டை, வார்டு எண்.7 முனீஸ்வரன் கோயில், வார்டு எண்.8 காமராஜபுரம் அருகில் மற்றும் சுப்பிரமணி கோயில் பின்புறம், வார்டு எண்.18 கொல்லர் தெரு ஆகிய 8 இடங்களில் அமைந்துள்ள பொது கழிப்பிடத்திற்கு தேவையான தண்ணீர் வசதி, மின்சார வசதி மற்றும் பழுது பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரு.9.80 இலட்சத்தை நகராட்சயின் குடிநீர் நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 3321/2020/இ1.

14. வாணியம்பாடி நகராட்சியில் வளையாம்பட்டு உரக்கிடங்கில் மல கசடு கழிவு கட்டமைப்பு அமைப்பதற்கு தேவையான வரைப்படம், மதிப்பீடு, வடிவமைப்பு மற்றும் இதர விவரங்களக்கான அறிக்கையை தயாரிக்க அனுபவமுள்ள ஆலோசகர் (Consultant) நிறுவனம் மூலம் தயார் செய்ய வேண்டியுள்ளதால், மேற்படி பணிக்கு முடிப்பதற்கான மதிப்பீடு தொகை ரூ.1.20 இலட்சத்தை நகராட்சி பொது நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 3321/2020/இ1.

15.வாணியம்பாடி நகராட்சியில் வார்டு எண்.27 கோணாமேடுபகுதியில் அமைந்துள்ள சமுதாய கூடம் மாத வாடகையில் பயன்படுத்திக்கொள்ள மாவட்ட வேலைவாய்ப்பு தொழில் நெறி வழிகாட்டு மையம், வேலூர் அவர்களின் கடிதத்தில் வரப்பெற்ற கடிதத்தின் அடிப்படையில், மேற்படி கட்டிடத்தை பழுதுகள் சரிசெய்து, பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.6.00/- இலட்சம் பொது நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியின் கீழ் செலவு செய்துக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3321 /2020/இ1.

16.வாணியம்பாடி நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 36 வரை உள்ள பகுதிகளில் தினமும் வீடு வீடாக மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பையை பிரித்து நுண்ணுயிர் உரமாக்குதல் மையத்தில் சேகரிக்கப்பட்டு வருகிறது. மேலும் இவற்றில் தினமும் மக்காத குப்பைகளை சேகரித்து சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்ப வேண்டியுள்ளதால், Baling machine மூலம் பெண்டல் செய்ய தேவையான இயந்திரம் வாங்குவதற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.9.80 இலட்சத்தை நகராட்சி பொது நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3321/2020/இ1.

17.வாணியம்பாடி நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 36 வரையுள்ள தெருக்களில் தினமும் குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக விடுப்பட்ட இடங்களில் பகிர்மான குழாய் மற்றும் வால்வுகள் மற்றும் தேவையான உபகரணங்களுக்கான தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.9.80 இலட்சத்தை நகராட்சியின் குடிநீர் நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 3321/2020/இ1.

18. வாணியம்பாடி நகராட்சியில் கொடையாஞ்சி மற்றும் இராமையன் தோப்பு தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பாலாற்று கிணறுகளின் மூலம் நீர் உறிஞ்சப்பட்டு வார்டு எண்.1 முதல் 36 வரை உள்ள பகுதிகளில், ஒன்பது உயர்நிலை நீர்தேக்க தொட்டி மூலம் தினமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் தற்போது வர உள்ள கோடை காலத்தை முன்னிட்டு, மேற்படி ஆற்றில் அமைந்துள்ள கிணறுகளில் சில்ட்டுகளை (Slit) அகற்றுவதற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.9.90/- இலட்சம் குடிநீர் நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியின் கீழ் செலவு செய்துக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 3321/2020/இ1.

19.வாணியம்பாடி நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 36 வரை உள்ள பகுதிகளில் தினமும் சேகரிக்கப்படும் குப்பைகளில் இருந்து வரும் குழந்தைகளுக்கு உபயோகப்படுத்தப்படும் Diaper எரித்து அப்புறப்படுத்த தேவையான Incinator வாங்குவதற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.3.00/- இலட்சம் பொது நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியின் கீழ் செலவு செய்துக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 3321/2020/இ1.

20.வாணியம்பாடி நகராட்சியில் அமைந்துள்ள பாலாற்றின் குறுக்கே C.L. road, ஓம்சக்தி கோயில் அருகில் அமைந்து தரை மட்ட பாலம் முழுவதுமாக சேதமடைந்து பொது மக்கள் செல்ல இயலாத நிலையில் உள்ளது. மேற்படி பாலத்தை புதியதாக அமைக்க தேவையான மதிப்பீடு, வடிவமைப்பு மற்றும் இதர விவரங்களுக்கான அறிக்கையை அனுபவமுள்ள ஆலோசகர் (Consultant) நிறுவனம் மூலம் தயார் செய்ய வேண்டியுள்ளதால், மேற்படி பணிக்கு முடிப்பதற்கான மதிப்பீடு தொகை ரூ.2.80 இலட்சத்தை நகராட்சி பொது நிதி 2020-21-ஆம் ஆண்டு நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 3321/2020/இ1.

**21.** வாணியம்பாடி நகராட்சிக்கு சொந்தமான ஜின்னா ரோட்டில் கட்டப்பட்டுள்ள **15–** கடைகளை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்படைக்க நகரமன்ற தீர்மான எண்.**199** நாள் **27.10.2017–**ம் தேதி நிர்வாக அனுமதி பெறப்பட்டதில் **13–**கடைகள் குத்தகை மூலம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் கடை எண். **2** பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் கோர யாரும் முன்வராத நிலையில் மீண்டும் **05.09.2019, 26.09.2019, 31.10.2019, 13.03.2020 04.11.2020** மற்றும் **16.12.2020–**ம் தேதி பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளி கோரியதில் **16.12.2020–**ம் தேதி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**கடை எண்.2**

| வரிசை எண் | ஒப்பந்தப்புள்ளியில் கலந்துக்கொண்டவர் | ஒரு மாத வாடகை ஒப்பந்தப்புள்ளி தொகை | வைப்பு தொகை செலுத்திய விவரம் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | வி.பாலாஜி, 22/486, ஜின்னா ரோடு, காதர்பேட்டை, வாணியம்பாடி | ரூ.9550/– | ரூ.300000/ பல்லவன் வங்கி வரைவோலை எண்.,466568 நாள் 03.11.2020 | நகராட்சி நிர்ணயம் செய்த மாத வாடகை ரூ.9400/– |
| 2 | ஜி,யுவராணி 22/486.ஜின்னா ரோடு, காதர்பேட்டை, வாணியம்பாடி | ரூ.9450/– | ரூ.300000/ பல்லவன் வங்கி வரைவோலை எண்.,466566 நாள் 03.11.2020 | |

இந்நகராட்சி வருவாய் ஆய்வரின் 16.12.2020 ம் தேதிய அறிக்கையில் கடை எண் 2 க்கு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியில் கோரப்பட்டுள்ள மாத வாடகை ரூ.9550/– மார்க்கெட் மதிப்பை விட கூடுதலாக உள்ளதால் மேற்படி கடையை ஒப்படைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கடை எண்.2– ஐ வரிசை எண்.1–ல் காணும் திரு.வி.பாலாஜி, என்பவரின் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று கடை எண் 2 ஐ குத்தகை மூலம் ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. திரு.வி.பாலாஜி, என்பவரின் ஒப்பந்தப்புள்ளி கூடுதலாக உள்ளதை ஏற்று கடையை
ஒப்படைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.924/2017/அ1

22. வாணியம்பாடி நகராட்சிக்கு சொந்தமான ஜின்னா ரோட்டில் கட்டப்பட்டுள்ள 15– கடைகளை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்படைக்க நகரமன்ற தீர்மான எண்.199 நாள் 27.10.2017–ம் தேதி நிர்வாக அனுமதி பெறப்பட்டதில் 13–கடைகள் குத்தகை மூலம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் கடை எண். 10 பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் கோர யாரும் முன்வராத நிலையில் மீண்டும் 05.09.2019, 26.09.2019, 31.10.2019, 13.03.2020 04.11.2020 மற்றும் 16.12.2020–ம் தேதி பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 16.12.2020–ம் தேதி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

கடை எண்.10

| வரிசை எண் | ஒப்பந்தப்புள்ளியில் கலந்துக்கொண்டவர் | ஒரு மாத வாடகை ஒப்பந்தப்புள்ளி தொகை | வைப்பு தொகை செலுத்திய விவரம் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | ஆர்.புவனேஸ்வரி, அழிஞ்சிகுப்பம், தேவஸ்தானம் அஞ்சல், வாணியம்பாடி. | ரூ.9500/– | ரூ.300000/ பாரத மாநில வங்கி வரைவோலை எண்.,448315 நாள் 08.12.2020 | நகராட்சி நிர்ணயம் செய்த மாத |
| 2 | டி.விஜயரங்கன். அழிஞ்சிகுப்பம், | ரூ.10001/– | ரூ.300000/ பாரத மாநில | |

| | | | | |
|---|---|---|---|---|
| | தேவஸ்தானம்<br>அஞ்சல்,<br>வாணியம்பாடி. | | வங்கி<br>வரைவோலை<br>எண்.,686598<br>நாள் 07.12.2020 | வாடகை<br>ரூ.9400/– |
| 3 | எஸ்.சையத் ஆரீப்,<br>16/28.சத்தாமியான்<br>தெரு,<br>திருப்பத்துார். | ரூ.10600/– | ரூ.300000/<br>பாரத மாநில<br>வங்கி<br>வரைவோலை<br>எண்.,686487<br>நாள் 03.11.2020 | |

இந்நகராட்சி வருவாய் ஆய்வரின் 16.12.2020 ம் தேதிய அறிக்கையில் கடை எண் 10 க்கு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியில் கோரப்பட்டுள்ள மாத வாடகை ரூ.10600/– மார்க்கெட் மதிப்பைவிட கூடுதலாக உள்ளதால் மேற்படி கடையை ஒப்படைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கடை எண்10– ஐ வரிசை எண்.3–ல் காணும் திரு.எஸ்.சையத் ஆரிப் என்பவரின் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று கடை எண் 10 ஐ குத்தகை மூலம் ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு.எஸ்.சையத் ஆரிப் என்பவரின் வாடகை தொகை கூடுதலாக உள்ளதை ஏற்று கடையை ஒப்படைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.924/2017/அ1

23. இந்நகராட்சி வருடாந்திர குத்தகை இனங்களை குத்தகைக்கு விடுதல் குறித்து அரசாணை (நிலை) எண,181 நாள்:19.09.2008–ல் வெளியிட்டுள்ளவாறு 01.04.2021 முதல் 31.03.2024 முடிய மூன்றாண்டுகளுக்கு கீழ்க்கண்டுள்ள குத்தகை உரிம இனங்களை 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளின்படி குத்தகை இனங்களை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறவும் மற்றும் பகிரங்க பொது ஏலம் விடவும், இதற்கான தினசரி தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்யவும், ஏல நிபந்தனைகள் வேலூர் மாவட்ட அரசிதழில் சிறப்பு வெளியீடு செய்யவும் மற்றும் ஒப்பந்த அறிக்கை கூட்டுறவு அச்சகம், நேப்கோ, வேலூர் மூலம் அச்சிடவும் , தினசரி செய்திதாளில் விளம்பரம் செய்திடவும், அனைத்து செலவினத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது,

# குத்தகை உரிமம் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி விவரம்

| வ. எண் | குத்தகை இனங்கள் விபரம் | சொத்து மதிப்புச்சான்று கொடுக்க வேண்டியது ரூ | 01.01.21-க்கு பிறகு பெறப்பட்ட சொத்துமதிப்பு சான்று உள்ள வர்கள் செலுத்த வேண்டிய வைப்புத் தொகை(வங்கி வரைவோலை யாக மட்டும்) ரூ. | சொத்து மதிப்புசான்று இல்லாதவர் கூடுதலாக செலுத்த வேண்டிய வைப்புத்தொகை (வங்கி வரைவோலையாக மட்டும்) ரூ. | காப்புத் தொகை செலுத்தப்பட வேண்டியது (வங்கி வரைவோலையாக மட்டும்) ரூ. | குத்தகை காலம் (ஆண்டு ஒன்றிற்கு 5% உயர்வின் அடிப்படையில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | நகராட்சி வாரச் சந்தையில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் (கோவிட்-19 SOP-ன்படி தற்காலிகமாக புதிய பேருந்து நிலையத்தில் மாட்டு சந்தை மட்டும் பிரதி வாரம் சனிக்கிழமை நடைபெறும்.) | 10,00,000/- | ரூ.2,50,000/- | ரூ.3,00,000/- | ரூ.1,00,000/- | 01.04.2021 முதல் 31.03.2024 வரை |
| 2 | நகராட்சி நவீன ஆடு அறுக்கும் கூடத்தில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் (ஆடு ஒன்றுக்கு ரூ.25/- மட்டும்) | 2,50,000/- | ரூ.50,000/- | ரூ.1,00,000/- | ரூ.50,000/- | 01.04.2021 முதல் 31.03.2024 வரை |
| 3 | நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 4,50,000/- | ரூ.50,000/- | ரூ.2,00,000/- | ரூ.1,00,000/- | 01.04.2021 முதல் 31.03.2024 வரை |
| 4 | நகராட்சி பேருந்து நிலையத்தின் அருகில் உள்ள காலி இடத்தில் வாகனபாதுகாப்பு நிலையம் அமைத்து கட்டணம் வசூலிக்கும் உரிமம் (மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகம் நீங்கலாக) | 4,50,000/- | ரூ.1,00,000/- | ரூ.2,00,000/- | ரூ.1,00,000/- | 01.04.2021 முதல் 31.03.2024 வரை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | இந்நகராட்சி எல்லைக்குள் நுழையும் சரக்கு லாரி மற்றும் இதர வாகனங்களில் காய்கறி மற்றும் இதர பொருட்கள் கொண்டு வரும் லாரிகளுக்கு சுங்கக் கட்டணம் (சனிக்கிழமை தவிர) இதர நாட்களுக்கு வசூலிக்கும் உரிமம் மற்றும் தனியார் குடிநீர் சப்ளை லாரிகளில் சேவைக் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 1,50,000/- | ரூ.50,000/- | ரூ.1,00,000/- | ரூ.50,000/- | 01.04.2021 முதல் 31.03.2024 வரை |
| 6 | இந்நகராட்சி எல்லைக்குள் சாலை ஓரங்களில் தரை மற்றும் தள்ளுவண்டிகளில் காய்கறிகள் பழங்கள் மற்றும் இதர பொருட்கள் வைத்து வியாபாரம் செய்வதை ஒழுங்குபடுத்தி (தமிழ் நாடு சிவில் சட்டம் 270-ன்படி ) சுங்கம் வசூல் செய்தல் உரிமம் (சனிக்கிழமை தவிர பிறநாட்களில்) | 12,00,000/- | ரூ.2,50,000/- | ரூ.3,00,000/- | ரூ.1,00,000/- | 01.04.2021 முதல் 31.03.2024 வரை |
| 7 | பக்ரித் பண்டிகைக்கான விற்பனைக்கு வரும் ஆடு மற்றும் மாடுகளுக்கான விற்பனை சனிக்கிழமை நீங்கலாக பண்டிகைக்கு முன்பின் 7-தினங்கள் ஆடு ஒன்றுக்கு ரூ.10/ம் மாடு ஒன்றுக்கு ரூ.20/ம் நுழைவுக் கட்டணமாக வசூலித்து ஜின்னா சாலையில் உள்ள வாரசந்தையில் வைத்து சுங்கம் வசூலித்தல் | 50,000/- | ரூ.5,000/- | ரூ.20,000/- | ரூ.10,000/- | 01.04.2021 முதல் 31.03.2024 வரை |

அரசாணை (நிலை) எண்.**181**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : **19.09.2008-**ன்படி அனைத்து வருடாந்திர குத்தகை இனங்களிலும் கட்டணங்கள் வசூலிப்பதற்கான உரிமைக்கான குத்தகைகால அளவை ஓராண்டிற்கு பதிலாக மூன்றாண்டுகளாக கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு நிர்ணயித்து அரசு ஆணையிட்டதை தொடர்ந்து அதன்படியே ஏலம் கோர அனுமதிக்கப்படுவர்.

- ஆரம்பத்தில் ஏலத்தின் மூலம் பெறப்படும் குத்தகை தொகையில் இரண்டாம் ஆண்டில் **5%** குத்தகை தொகை உயர்வும் மூன்றாம் ஆண்டில் முந்தைய ஆண்டின் குத்தகை தொகையில் **5%** குத்தகை தொகை உயர்வு செய்யப்படும்.

- மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை அங்காடிகள், பேருந்து நிறுத்தங்கள், சந்தைகள், கட்டண கழிப்பிடங்கள் ஆகிய இனங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமை பொது ஏலத்தில் விடப்படும்.

- மூன்றாண்டு கால அளவு என்ற ஒரு தொகுப்பு கால அளவிற்குள் கட்டணம் வசூலிக்கும் குத்தகைதாரர் காலமானால் அவர்களின் வாரிசுதாரர்கள் குத்தகைதாரராக அவ்வுரிமத்தை

பெறலாம். வாரிசுதாரருக்கு விருப்பம் இல்லையெனில் உரிமை மறு ஏலம் விடப்படும். இவைகள் தவிர ஏற்கனவே குத்தகை விடுவதற்காக நடைமுறையில் உள்ள அனைத்து நிபந்தனைகளும் தொடரும்.

- ஒவ்வொரு இனத்திற்கும் உரிய வைப்புத் தொகையை வங்கி வரைவோலை மூலம் நகராட்சி கருவூலத்தில் செலுத்தி அதற்கான அத்தாட்சியை பெறுதல் வேண்டும். இவ்வாறு தகுந்த அத்தாட்சி பெற்ற நபர்கள் மட்டுமே அன்று நடைபெறும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர். இதர நபர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

- ஒப்பந்தப்புள்ளி படிவம் கோரி விண்ணப்பம் கொடுக்கும் போது விண்ணப்ப.த்துடன் வைப்பு தொகை செலுத்தப்பட்டதற்கான வங்கி வரைவோலையின் நகலினை இணைக்க வேண்டும்.

- குத்தகை இனம் ஒவ்வொன்றிலும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் பங்கு பெற விரும்புவோர் செலுத்த வேண்டிய வைப்புத் தொகைக்கான வங்கி வரைவோலையை ஒப்பந்தப்புள்ளிக்கான ஆவணங்களுடன் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும். இரண்டிற்கும் தனித்தனியாக பொறுப்பு தொகை செலுத்த வேண்டும்.

- பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்துககொள்ளும் விண்ணப்பதாரர் முந்தைய ஆண்டின் நிலுவை ஏதுமில்லை என நகராட்சி ஆணையரின் சான்று பெற்று விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

- பொது ஏலம் முடிந்த பின்னர் ஒவ்வொரு இனத்திற்கும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தனித்தனியாக வகைப்படுத்தி, வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் / பொது ஏலதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

- ஏலம்/ஒப்பந்தப்புள்ளி தினத்திற்கு முந்தைய நாள் ஒப்பந்தப்புள்ளி/பொது ஏலத்தில் கலந்துக்கொள்ள தனித்தனியாக விண்ணப்பத்துடன் மாலை 4.00 மணிக்குள் அசல் வங்கி வரைவோலை இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். தவறினால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

- ஏலம்/ஒப்பந்தப்புள்ளி தினத்தன்று குத்தகை இனத்திற்கான ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் போது அசல் ஒப்பந்தப்புள்ளி படிவத்துடன் எந்த இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறதோ அந்த இனத்திற்கான ஏல வைப்புத் தொகைக்கான உண்மை நகல் வங்கி வரைவோலையை இணைத்து கொடுக்க வேண்டியது. அவ்வாறு இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

- பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் தங்கள் தொடர்பான ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தின்படி .................2021–ம் தேதி மாலை 4.00 மணிக்குள் விண்ணப்பம் நகராட்சி ஆணையரிடம் கொடுக்க வேண்டியது. பின்னர் பெறப்படும் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

- ஒவ்வொரு இனத்திற்கும் பொது ஏலம் அல்லது ஒப்பந்தப்புள்ளியில் எதில் அதிகப்பட்சமாக கேள்வி கேட்கப்படுகிறதோ அதையே உயர்ந்தபட்ச கேள்வியாக கருதப்படும். இதன் அடிப்படையில் மன்றத்திற்கு பரிசீலனைக்கு கொண்டு செல்லப்படும்.

- ஒப்பந்தப்புள்ளி கட்டுப்பாடுகள், நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பம் அடங்கிய கையேட்டினை ரூ.50/- செலுத்தி நகராட்சி அலுவலகத்தில் அலுவலக வேலை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

- ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர செலுத்தப்படும் டெபாசிட் தொகை குத்தகை காலம் முடிவுற்றவுடன் தணிக்கை தடைக்கு உட்பட்டு திரும்ப வழங்கப்படும்.

- சொத்து மதிப்பு சான்றுடன் செலுத்த வேண்டிய வைப்புத் தொகைக்கு கீழ்க்கண்ட ஆவணங்களை சமர்ப்பித்தால் மட்டுமே தொகை செலுத்த அனுமதிக்கப்படுவார்கள்.

    i) 01.01.2021-க்கு பின்னர் சொத்து மதிப்பு சான்று பெற்றிருக்கப்பட வேண்டும். இந்த தேதிக்கு முன்னர் பெறப்பட்ட சொத்து மதிப்பு சான்று ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இந்நகராட்சி ஒப்பந்ததாரராக இருப்பவர் ஏல தொகை செலுத்தும் போது நடப்பு ஆண்டில் ஒப்பந்ததாரராக புதுப்பித்த உத்திரவு, சொத்து மதிப்பு சான்று / வில்லங்க சான்று **(01.01.2021-க்கு பின்னர் பெறப்பட்டது)** ஆகியவைகள் கொடுக்க வேண்டும்.

# <u>பொதுக் கட்டுப்பாடுகள்</u>

1. அரசாணை எண்.**181** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை நாள் : **19.09.2008**–ன்படி குத்தகை உரிமங்கள் ஓராண்டிற்கு பதிலாக **2021 - 2022** முதல் **2023– 2024** முடிய மூன்று ஆண்டுகளுக்கு கீழ்கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு நிர்ணயம் செய்யப்படும். **2021–2022**–ம் ஆண்டில் ஏலத்தின் வாயிலாக பெறப்படும் குத்தகையில் இரண்டாம் ஆண்டில் **5%** குத்தகை தொகை உயர்வு செய்தும் மூன்றாம் ஆண்டில் இரண்டாம் ஆண்டில் நிர்ணயம் செய்த குத்தகை தொகையில் **5%** உயர்வு செய்தும் நிர்ணயம் செய்யப்படும்.
   உதாரணமாக ஆரம்ப ஆண்டு குத்தகை தொகை ரூ.**100/–** என்றால்

   இரண்டாம் வருடத்திற்கான குத்தகை தொகை ரூ.**105/–**
   மூன்றாம் வருடத்திற்கான குத்தகை தொகை ரூ.**110.25** ஆக இருக்கும்.

2. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை காய் கடை அங்காடிகள் பேருந்து நிறுத்தங்கள், சந்தைகள், கட்டண கழிப்பிடங்கள், ஆகிய இனங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமை பொது ஏலத்தில் விடப்படும்.

3. மூன்றாண்டு கால அளவு என்ற ஒரு தொகுப்பு கால அளவிற்குள் கட்டணம் வசூலிக்கும் குத்தகைதாரர் காலமானால் அவர்களின் வாரிசுதாரர்கள் குத்தகைதாரராக அவ்வுரிமைத்தைப் பெறலாம். வாரிசுதாரருக்கு விருப்பம் இல்லையெனில் உரிமை மறு ஏலம் விடப்படும். அதனால் ஏற்படும் இழப்பு குத்தகைதாரரின் வாரிசுதாரரிடமிருந்து வசூல் செய்யப்படும்.

4. அனைத்து உரிமங்களும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920**–ன் கீழ் உள்ள வழிச்சட்டங்கள், துணை விதிகள், அரசாணைகள், மன்றம் விதித்துள்ள அல்லது இனி விதிக்கும் பொது கட்டுப்பாடுகள், தனிக் கட்டுப்பாடுகள் மற்றும் சிறப்புக் கட்டுப்பாடுகள், ஒப்பந்தத்தில் (Agreement) உள்ள கட்டுப்பாடுகள் மற்றும் ஆணையரால் வழங்கப்படும் உத்திரவுகளுக்கு உட்பட்டவையாகும். அவ்வபோது நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் தெரிவிக்கும் வழிகாட்டும் நெறிமுறைகளை குத்தகைதாரர் பின்பற்ற வேண்டும்.

5. ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர விரும்புவோர் ஒவ்வொரு இனத்திற்கும் எதிரில் குறிக்கப்பட்டிருக்கும் வைப்புத் தொகையை வங்கி வரைவோலையாக (Demand Draft) மட்டுமே நகராட்சியில் செலுத்திடல் வேண்டும். <u>இந்த வங்கி வரைவோலை ஏல தேதிக்கு முன்தினம் (விடுமுறை நாள் நீங்கலாக) பிற்பகல் **4.00** மணிக்குள் ஆணையரிடம் ஒப்படைத்து இதற்குரிய அத்தாட்சி பெறுதல் வேண்டும். இவ்வாறு அத்தாட்சி பெற்ற நபர்கள் மட்டுமே ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.</u> வைப்புத் தொகையை ரொக்கமாகவோ, காசோலையாகவோ செலுத்த அனுமதிக்கப்படமாட்டாது. வைப்புத் தொகைக்கான வரைவோலையை “ஆணையர்” வாணியம்பாடி நகராட்சி, (Commissioner, Vaniyambadi Municipality) என்ற பெயரிலேயே எடுக்க வேண்டும். **ஏலத்திற்கும் / ஒப்பந்தப்புள்ளிக்கும் தனித்தனியாக வைப்புத் தொகை செலுத்த வேண்டும்.**

6. ஏலம்/ஒப்பந்தப்புள்ளி குறித்து எந்த ஒரு தெளிவுரை/சந்தேகங்கள் இருந்தாலும் ஏல அறிவிப்பு வெளியிடப்பட்ட உடன் தேவையான விபரங்களை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். தவறினால் நகராட்சி நிர்வாகம் எவ்விதத்திலும் பொறுப்பல்ல.

7. உரிமகாலத்தில் உரிம இனங்கள் **<u>‘உள்ளது உள்ள நிலையில்’</u>** ஏலம்/ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் உரிமத்திற்கு விடப்படும். ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் பங்கு பெறுவதற்கு முன்பே உரிம இடத்தை நேரில் சென்று பார்த்து உரிம இனத்தின் நிலைமையை நன்கு அறிந்து தெரிந்து கொள்ள வேண்டியது அவரவர் பொறுப்பாகும். பங்கு பெற்ற பின்னர் உரிம சொத்துக்கள் குறித்து குறைகள்/புகார்களை எடுத்துரைத்தல் கூடாது. அவ்வாறு எடுத்துரைத்தால் அவை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

8. இவைகள் தவிர நகராட்சியில் உள்ள அங்காடிகள் பேருந்து நிறுத்தங்ள், சந்தைகள், சைக்கிள் நிறுத்தங்கள், கட்டண கழிப்பிடங்கள், தங்கும் விடுதிகள் போன்ற இனங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமைகளை குத்தகை விடுவதற்காக ஏற்கனவே நடைமுறையில் உள்ள அனைத்து நிபந்தனைகளும் தொடரும்.

9. ஏலம்/டெண்டர் கேட்க விரும்பும் ஒவ்வொருவரும் அவர்களது சொத்து பொறுமானத்தை தெளிவாக காட்டக் கூடியதும் தாசில்தாரரிடமிருந்து **1.1.2021**–க்குப் பிறகு அந்தந்த குத்தகை உரிமம் இனங்களுக்கு எதிரே

குறிப்பிட்ட தொகைக்கு சொத்து சால்வன்சி சான்று வாங்கி வர வேண்டும். ஏலம் / ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை செலுத்தும் முன் அசல் சால்வன்சி அலுவலகத்தில் கொடுத்துவிட வேண்டும். ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கேட்க விரும்புவர்கள் போதுமான சொத்து உள்ளவர்கள் என்று காட்ட போதுமான அசல் பத்திரங்களையும் **அவை மீது 13 வருடங்களாக வில்லங்கம் இல்லை என்று பத்திர பதிவு அலுவலரிடமிருந்து சான்று பெற்று ஏலம்** கோருவோருக்கு முன்பே கொண்டு வந்து காட்ட வேண்டும். சொத்து சான்று (சால்வன்சி சான்றிதழ்) யார் பெயரில் வழங்கப்பட்டுள்ளதோ அவர் அல்லது அவரால் நோட்டரி பப்ளிக் எழுத்து மூலம் அதிகாரம் பெற்றவர்களாலோ தான் சொத்து சான்றிதழ் பெற்ற நபர்களின் பெயர்களில் ஏலம் கோர வேண்டும். தவிர குத்தகை பணம் செலுத்தி முடியும் வரை சொத்து சான்றிதழ் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை யாருக்கும் பாராதீனம் செய்வதில்லை என்று தனியாக எழுத்து மூலமாக உறுதி மொழி எழுதி கொடுக்க வேண்டும். சால்வன்சி யார் பெயரில் உள்ளதோ அவர் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி / பொது ஏலத்தில் கலந்து கொள்ள முடியும். நிறுவனத்தின் பெயரால் ஒப்பந்தப்புள்ளி / ஏலம் கோருபவர்கள் மேற்படி நிறுவனத்தின் பெயரில் சொத்து மதிப்பு சான்று பெற்று சமர்ப்பிக்க வேண்டும். நிறுவன பங்குதாரர்கள் பெயரில் உள்ள சால்வன்சி ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. நிறுவனத்தின் மூலம் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் அந்த நிறுவனத்திடம் சான்று பெற்று நோட்டரி பப்ளிக் சான்று (Counter Signed) பெற்று சமர்ப்பிக்க வேண்டும். **தொடர்ந்து மூன்று ஆண்டுகள் என்பதால் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதத்தில் புதிய சால்வன்சி சான்று பெற்று சமர்ப்பிக்க வேண்டும். மூடி முத்திரையிடப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.**

10. ஏலம் கோருபவர் யாராவது சொத்து சான்றிதழ் மூலம் ஏலம் கோரும் சமயத்தில் சமர்ப்பிக்க இயலாமல் போனால் அவர்கள் கூறும் காரணம் தகுந்த ஆதாரத்துடனும் ஆணையர் அவர்களின் திருப்திக்கும் உட்பட்டு இருந்தால் அன்னார் சொத்து சான்றிதழுக்கு பதிலாக அந்தந்த குத்தகைகளுக்கு எதிரே குறிப்பிட்ட தொகையை காலம் 5—ல் உள்ள வைப்புத் தொகை நகராட்சியில் செலுத்த வேண்டும். ஏலம் உறுதிமொழி உத்திரவு பிறப்பிக்கப்பட்டதும் அசல் சொத்து சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்.

11. எவராவது ஏற்கனவே ஏலம் உரிம தவணைத் தொகையை சரிவர கட்டத்தவறி இருந்தாலோ, நகராட்சிக்கு எவ்விதத்திலும் வரி/வரியில்லா இனம் அல்லது வேறு எந்தவித உரிமத் தொகை செலுத்த தவறியவராக இருந்தாலோ அல்லது நகராட்சிக்கு எவ்விதத்திலும் நிலுவை பாக்கி உள்ளவராகவோ மற்றும் உரிமம் கட்டுப்பாடுகளுக்கு எதற்காவது மாறாக நடந்திருந்தாலோ நேர்மை தவறியதற்காக குற்றம் சாட்டப்பட்டு தண்டனை வழங்கப்பட்டவராய் இருந்தாலாவது மற்ற எந்த காரணத்தினாலோ அவர் மறுபடியும் நகராட்சி உரிமதாரராக இருப்பது விரும்பத்தக்கதல்லதென்று ஏலம் நடத்துகிறவருக்கு தெரிந்தாலோ அப்பேற்பட்டவர் பொதுவாக ஏலம் கேட்க அனுமதிக்கப்படமாட்டார். அவர் கேட்கும் ஏலத்தை மறுத்துவிட ஏலத்தை நடத்துகிறவருக்கு அதிகாரமுண்டு.

12. **எந்த குத்தகை உரிமைக்காகவும் சான்றுகள் காட்டப்பட்ட சொத்துக்களை மீண்டும் அதே ஆண்டின் வேறு குத்தகைக்கு சான்றாக காட்டி ஏலம் கோர அனுமதிக்கப்படமாட்டாது.** அப்படி சான்று காட்டியதாகவோ அல்லது தவறான தகவல் அளிக்கப்பட்டதாகவோ தெரிய வருமானால் எந்தவித முகாந்திரமின்றி ஏலத்தை ஏலதாரரின் சொந்த பொறுப்பில் ரத்து செய்து மறு ஏலம் விடப்படும். ஒரு குறிப்பிட்ட குத்தகை உரிமை காலத்தில் சொத்து சான்றிதழ் குறிப்பிட்டுள்ள தொகைக்கு அதிகப்படியான குத்தகை உரிமை எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது. எந்த ஒரு குத்தகை உரிமைக்காகவும் காட்டப்பட்டுள்ள சொத்து சான்றிதழில் குறிப்பிட்டுள்ள தொகைக்கு அதிகப்படியாகாமல் அதனை இதர தொகைக்கு சான்றாக ஏற்றுக் கொள்ளப்படும்.

13. ஏலம் நடத்துகின்றவர் யாதொரு ஏல இனத்தினை தகுந்த காரணங்களுக்காக ஒத்தி வைக்க நேரிட்டால் ஏலம் ஒத்தி வைத்து குறிப்பிடும் பின் தேதிகளில் அதனை நடத்தலாம். ஏலத்தை ஒத்தி வைக்கும் போது உயர்ந்த கேள்வி கேட்பவர் ஏலப்பட்டியலில் கையெழுத்திட வேண்டும். ஒத்தி வைத்த நாளில் அதுவே முதல் கேள்வியாக தொடங்கும். ஏலம் முடிவாகும் வரை அல்லது வேறுவித ஏற்பாடு செய்யும் வரை உச்சக்கேள்வி கேட்டிருப்பவர் அடுத்த உயர்ந்த கேள்வி கேட்டிருப்பவர் ஆகியோர்களின் ஏல வைப்புத் தொகையை நிறுத்தி வைக்கப்படும்.

14. ஏலத்தில் பங்கு கொள்பவர்கள் / ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர்கள் பெயரில் வாணியம்பாடி நகராட்சிக்கு எவ்வித தொகை நிலுவையும் இருக்கக் கூடாது. 31.01.2021 முடிய நகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகை எதுவும் நிலுவையில்லை என்பதற்குரிய சான்றினை **(No Due Certificate)** முறையாக நகராட்சி ஆணையர் அவர்களிடமிருந்து பெற்று உரிய விண்ணப்பம் அளித்து ஏல தேதிக்கு 3 நாட்களுக்கு முன்பாக பெற்று வைத்துக் கொள்ள வேண்டும். அதன் அசலை ஏலத்தின் போது ஏலம் நடத்தும் அலுவலர் கோரும் போது காண்பிக்க வேண்டும். இதன் நகல் ஒப்பந்தப்புள்ளி அல்லது ஏல விண்ணப்பத்துடன் மற்றொரு ஆவண நகலுடன் சேர்ந்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட காலக் கெடுவிற்கு முன் அளிக்காமல் கால தாமதமாக மனு செய்தால் சான்றிதழ் அளிக்கப்பட மாட்டாது.

15. குத்தகை இனங்களில் நகராட்சி வசூல் செய்ய வேண்டிய கட்டண விகிதங்கள் அடங்கிய அறிவிப்பு பலகை ஒன்று பொது மக்களின் பார்வைக்கு எல்லோரும் அறியும் வண்ணம் உரிமம் பெற்றவர் தனது சொந்த செலவில் உரிம உத்திரவு பெற்ற மூன்று தினங்களுக்குள் எல்லா நுழைவாயில்களிலும் வைக்க வேண்டும். தவறினால் நகராட்சி எடுக்கும் நடவடிக்கைக்கு விதிக்கும் அபராதத்திற்கும் உரிமதாரர் கட்டுப்பட்டவராவார். நகராட்சியில் அறிவிப்புப் பலகை அமைக்கப்பட்டு செலவுத் தொகையை உரிமதாரரிடமிருந்து வசூல் செய்யப்படும்.

16. இந்த அறிக்கையில் கண்டுள்ள குத்தகை உரிமம் இனங்களை ஏலம் முடிந்ததும் மறு ஏலம் கொண்டு வர விரும்புகின்றவர்கள் வரிசை எண்.13–ல் தெரிவித்துள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்வதுடன் ஏலம் விட்ட 24 மணி நேரத்திற்குள் மறு ஏலம் கோர விரும்புகிறவர் கோரும் உயர்ந்த ஏலத் தொகை முழுவதையும் முன்னதாக செலுத்துவதுடன் முடிவான தொகைக்கு மேல் 10% நகராட்சி கருவூலத்தில் முன்பணமாக செலுத்தி எவ்வளவு தொகைக்கு ஏலம் கோருவார் என்ற விவரத்துடன் மனு விண்ணப்பிக்க வேண்டும். இதற்கு சம்மதிப்பவர்கள் ஏற்கெனவே சால்வன்சி மற்றும் வைப்பு தொகை செலுத்தியவர்கள் மட்டுமே மறு ஏலத்திற்கு மனு செய்து கொள்ள தகுதியுள்ளவர் ஆகிறார்கள். அவ்வாறு மனு செய்து மறு ஏலத்தில் கலந்து கொள்ளாமல் இருந்து விட்டால் அவர்களால் செலுத்தப்பட்ட முன்பணம் பறிமுதல் செய்யப்படும். ஏற்கனவே ஏலம் போன தொகையினை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

17. இந்த ஏல அறிக்கையில் கண்டுள்ள குத்தகை இனங்களில் ஏலம் / ஒபப்நதப்புள்ளி உறுதி செய்யும் இனத்திற்கு உரிமத்திற்கான ஓராண்டு தொகையினை ஒரே தவணையில் செலுத்த வேண்டும். தவணைத் தொகையில் செலுத்த அனுமதி வழுங்க இயலாது..

மேலும், ஐந்து லட்சத்திற்கு அதிகமாக குத்தகை உரிமம் எடுக்கும் குத்தகைதாரர்கள் முதல் தவணையாக ஐந்து லட்சம் அல்லது 3 மாத டெபாசிட் இதில் எது அதிகமோ குத்தகை உரிமம் உத்திரவு பெற்ற 7 தினங்களுக்குள் செலுத்த வேண்டும். குத்தகை உரிமம் தொகையினை டிசம்பர் 31ம் தேதிக்குள் 9 மாத சம தவணைகளாக செலுத்த வேண்டும். அடுத்த ஆண்டிற்கான குத்தகை உரிமத் தொகையினை சென்ற ஆண்டின் குத்தகை தொகையில் ஐந்து சதவீதம் உயர்வு செய்து வித்தியாச தொகையினை ஜனவரி 31 ம் தேதிக்குள் அலுவலக உத்திரவின்படி செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தப்படும் வைப்பு தொகையை மூன்றாம் ஆண்டின் கடைசி மூன்று மாதங்களுக்கு ஈடு செய்துக் கொள்ளப்படும். குத்தகை உரிமத்திற்கான தொகையை வங்கி வரைவோலையாக (Demand Draft) செலுத்த வேண்டும். மேற்க்கண்ட விவரப்படி ஏலம் / ஒப்பந்தப்புள்ளியின் தொகையை செலுத்தினால் மட்டுமே அந்தந்த வருடத்திற்கான ஏல உரிமையை வசூல் செய்து கொள்வதற்கு உத்திரவு வழங்கப்படும். மேலும் இரண்டாம் வருடத்திற்கு (2022–2023) முந்தைய ஆண்டின் குத்தகை தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்த குத்தகை தொகை 31.01.2022–க்குள்ளும் மூன்றாம் வருடத்திற்கான (2023–2024) குத்தகை ஆண்டின் குத்தகை தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்த குத்தகை தொகை 31.01.2023–க்குள்ளும் செலுத்த வேண்டும். குறித்த காலக்கெடுவிற்குள் செலுத்தாமல் மறு ஏலம் வைக்க நேர்ந்தால், அதனால் ஏற்படும் நிதி இழப்பு மற்றும் ஆணையரால் விதிக்கப்படும் அபராதம் போன்றவைகளுக்கு ஏலதாரர் / ஒப்பந்தப்புள்ளி அளித்தவர் கட்டுப்பட்டவராவார்.

18. உயர்ந்த பட்சமாக ஏலம் கோருபவர்கள் அவருக்கு ஏலம் உறுதியானவுடன் ஏலத்தை ஏற்க மறுத்தால் அவருடைய மொத்த வைப்புத் தொகையும், பறிமுதல் செய்யப்பட்டு மறு ஏலம் விடப்படும். அதனால் மன்றத்திற்கு ஏற்படும் எல்லா இழப்புகட்கும் அவரே பொறுப்பாவார்.

19. ஏலம் முடிந்த பிறகு எந்த ஏலதாரரும் தன் குத்தகை உரிமை மற்றொருவருக்கு மாற்றும்படி மனு கொடுத்தால் அது ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

20. ஏலம் முடிந்த பிறகு ஏலப்பட்டியல் அவ்வப்போது திருந்திய 1920 ஆம் ஆண்டு 5–வது சட்டமாகிய தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 68வது பிரிவின்படி குத்தகை அல்லது உரிமைக்கு விட அதிகாரம் பெற்ற நகரமன்றத்தின் அல்லது ஒப்பந்த குழுவின் ஒப்புதலுக்கு வைக்கப்படும். குத்தகை தேர்ந்தெடுக்கும் உரிமையும் குத்தகை உரிமை அல்லது உரிமை வழங்கும் உரிமையும் நகரமன்றம் அல்லது ஒப்பந்த குழுவிற்கு தான் உண்டு. ஏலத்தின் உயர்ந்த ஏலக் கேள்வித் தொகையை கூட எவ்வித காரணம் காட்டமல் நிராகரிக்க நகரமன்றத்திற்கும், ஒப்பந்தக் குழுவிற்கும் அதிகாரம் உண்டு. நகர மன்றம் அல்லது ஒப்பந்தக்குழு குத்தகையை அல்லது உரிமையை ஒப்புக்கொள்ளாவிட்டால் கேள்விதாரர் செலுத்திய வைப்புத் தொகையை மனு கொடுத்து திரும்ப பெற்றுக் கொள்ளலாம். உயர்ந்த ஏலம் கேட்போர் மற்றும் 2–வது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருவோர் வைப்பு தொகை திருப்பிதரபடமாட்டாது. உயர்ந்த பட்ச குத்தகைதாரருக்கு உரிமை ஒப்படைப்பு செய்த பின்புதான் 2–வது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருபவரின் பொறுப்புத் சால்வன்சி திரும்ப வழங்கப்படும்.

21. உரிம சொத்துக்களை உரிமைதாரர்கள் எந்த காரணத்தை கொண்டும் உரிமம் வழங்கப்பட்ட காரணத்தை தவிர வேறு எந்த காரணத்திற்கும் உபயோகப்படுத்த கூடாது. தவறினால் மேற்படி உரிமத்தை ரத்து செய்த மறு ஏலம் விடவும் அதனால் ஏற்படும் இழப்பையும் வசூல் செய்யப்படும்.

22. வருமான வரி செலுத்தியதற்கு அடையாளமாக ஏலதாரர் வருமான வரி அலுவலரிடமிருந்து ஏலம் முடிந்த 15 நாட்களுக்குள் சான்று பெற்று தாக்கல் செய்ய வேண்டும்.

23. ஒவ்வொரு குத்தகைதாரரும் ஏல நிபந்தனைகளின்படி நடப்பதாகவும், ஏலம் சம்மந்தமான சட்ட நிபந்தனைகளின்படி இதுவரையில் உள்ளதும், இனி அவ்வப்போது ஏற்படக்கூடிய நகரமன்ற தீர்மானங்கள் துணை சட்ட விதிகளின்படியும் நடப்பதாகவும் ஒப்புக்கொண்டு ஏலம் உறுதி செய்யப்பட்ட நாள் முதல் ஆணையர் குறிப்பிடும் நாளுக்கு ஒப்பந்தத்தை சரிவர நடத்தி வருவதற்காக அவரது சொந்த செலவில் ஆணையர் அவர்கள் ஏற்படுத்தும் கட்டுபாடுகளின்படி சரியான மதிப்புள்ள ஒப்பந்தப் பத்திரத்தில் ஒப்பந்தப்பத்திரம் எழுதி தன் சொந்த செலவில் உரிமை பெற்ற ஏழு தினங்களுக்குள் சட்டப்படி பதிவு செய்து கொடுக்க வேண்டும். மேலும் குத்தகைதாரர் செலுத்தப்பட்ட வைப்புத் தொகையை அவர் இழந்து விடுவதோடல்லாமல் மறு ஏலம் போடுவதாலோ நகரமன்றத்திற்கு ஏற்படும் இழப்புகளையும் அதன் மீது பிற செலவையும், அன்னாரும் அன்னாருடைய வாரிசுதாரர்களும் உட்பட ஈடு செய்யப்பட வேண்டியராவர். மறு ஏலத்தால் கூடுதல் தொகை கிடைத்தால் அதன் மீது தவறி உரிமை பாராட்ட முடியாது.

24. ஒவ்வொரு குத்தகை உரிமையின் துவக்க மதிப்பு ஏலம் நடத்துகிறவரால் நிர்ணயம் செய்யப்படும். அதனை கூட்டவோ, குறைக்கவோ அவருக்கு உரிமை உண்டு. பொது ஏலம் விடும் சமயத்தில் இடையில் கூடுதல் வைப்புத் தொகை செலுத்துமாறு கோர ஏலம் விடுபவருக்கு அதிகாரம் உண்டு.

25. ஏலம் நடத்துகிறவர் யாதொரு ஏல இனத்தை தகுந்த காரணங்களுக்காக ஒத்தி வைக்க நேரிட்டால் ஏலம் ஒத்திவைத்து குறிப்பிடும் பின் தேதிகளில் அதனை நடத்தலாம். ஏலத்தை ஒத்தி வைக்கும் போது உயர்ந்த கேள்வி கேட்பவர் ஏல பட்டியலில் கையெழுத்திடவேண்டும். ஒத்தி வைத்த நாளில் அதுவே முதல் கேள்வியாக தொடங்கும். ஏலம் முடிவாகும் வரை அல்லது வேறு வித ஏற்பாடு செய்யும் வரை உச்ச கேள்வி கேட்டிருப்பவர் அடுத்த உயர்ந்த கேள்வி கேட்டிருப்பவர் ஏல வைப்புத் தொகையை நிறுத்தி வைக்கப்படும்.

26. ஏல கால ஆரம்பித்திலாவது, மத்தியலாவது, இறுதியலாவது இந்த விளம்பரத்தில் கண்ட சில இனங்களில் சிலவற்றை எடுத்துவிடவோ, அல்லது அவற்றுடன் எதையேனும் சில இனங்களை சேர்க்கவோ ஆணையருக்கு அதிகாரம் உண்டு. இதனால் நகராட்சியின் மேல் வழக்கு தொடரவோ இழப்பீடு கோரவோ கூடாது.

27. ஏலம் முடிந்தவுடன் உயர்ந்த ஏலம் கேட்டு எடுத்தவர்கள் ஏலம் ஜாபிதாவில் கையெழுத்து போட வேண்டும். மற்றும் சம்மந்தப்பட்ட ஏலத்தில் கலந்துக் கொண்டவர்களும் சாட்சியாக கையெழுத்து போட வேண்டும்.

28. குத்தகை இனம் ஒவ்வொன்றிலும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் பங்கு பெற விரும்புவோர் செலுத்த வேண்டிய வைப்புத் தொகைக்கான வங்கி வரைவோலை ஒப்பந்தப்புள்ளிக்கான ஆவணங்களுடன் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும். அதன் நகலினை ஏல விண்ணப்பத்துடன் மற்ற ஆவணங்களுடன் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும்.

29. ஒவ்வொரு உரிம இனத்திற்கும் ஏலம் நடத்தும் அலுவலரால் சர்கார் மதிப்பு நிர்ணயம் செய்யப்படும். அவசியம் ஏற்பட்டால் இத்தொகையை மாற்றியமைக்க ஆணையருக்கு அல்லது அவரது அதிகாரம் பெற்று ஏலம் விடும் அலுவலருக்கும் உரிமை உண்டு.

30. பொதுவாக ஒப்பந்தப்புள்ளியில் / ஏலத்தில் உயர்ந்த பட்ச தொகை கேள்விதாரர்க்கு மட்டுமே உறுதி செய்வது குறித்து மன்றத்திற்கு விபரங்கள் வைக்கப்படும். ஆனால் யாதொரு காரணமும் சொல்லாமல் எந்த கேள்விகளையும் ஒப்புக் கொள்ளவோ அல்லது மறுக்கவோ அல்லது மறு ஏலம் நடத்தவோ ஆணையருக்கு பூரண அதிகாரம் உண்டு.

31. ஏற்கனவே உரிமதாரர்களாக இருப்பவர்களுக்கு நகராட்சியிலிருந்து வர வேண்டிய எந்தவிதமான தொகையிலிருந்து இதில் கண்ட உரிமங்களுக்கு தேவையான வைப்புத் தொகையை உளவடை செய்து கொள்ளும்படி கேட்கப்பட்டால் அது ஒப்புக்கொள்ளப்படமாட்டாது. இந்த ஏலங்கள் தனி நடவடிக்கைகள் ஆகும். பழைய உரிமங்களுக்கும் இவற்றிற்கும் தொடர்பு செய்ய வழிவகை இல்லை.

32. குத்தகை உரிமைதாரர் அல்லது ஒப்பந்ததாரர் தாங்கள் வசூல் செய்யும் தொகைக்கு அச்சிட்ட ரசீது கொடுக்க வேண்டும். தவறினால் ஒவ்வொரு தவறுக்கும் தண்டம் ரூ.100/—க்கு மேற்பாடாமல் விதிப்பதற்குள்ளாவர்.

33. உரிமம் பெற்றவர் உரிமத்திற்கு என நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் மட்டுமே வசூல் செய்தல் வேண்டும். அனுமதிக்கப்படாத கட்டணம் வசூலிக்கக் கூடாது. **உரிமையாணை பெற்றவர் வசூலிக்கும் தொகைக்கு உரிமதாரர் தனது சொந்த பொறுப்பிலும், செலவிலும் ரசீது அச்சிட்டு நகராட்சியின் முறையான அங்கீகாரம் பெற வேண்டும். மேலும் நகராட்சி முத்திரை பதித்த அச்சு சீட்டு மட்டுமே பயன்படுத்துதல் வேண்டும்.** வழங்கப்படும் ரசீது புத்தகங்களுக்கு அடிக்கட்டையும் (கவுண்டர் பைல்) அச்சடிக்க வேண்டும். வசூலிக்க வழங்கப்படும் ரசீதுகள் அச்சடிக்கும் முன்பு அவைகளின் மாதிரிகளை நகராட்சி அலுவலகத்திற்கு கொண்டு வந்து காண்பித்து அவைகளுக்கு ஆணையரின் ஒப்புகை பெற்று பின்பு தான் அச்சடிக்க வேண்டும். அச்சடித்த பிறகு அவ்வப்போது உபயோகப்படுத்தும் கட்டண ரசீது புத்தகங்களை அலுவலகத்திற்கு கொண்டு வந்து காண்பித்து பதிவேட்டில் பதித்த பிறகு தான் மன்ற முத்திரை போட்டு கொள்ள குத்தகைதாரர் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். வசூலிக்க வழங்கப்படும் ரசீதுகள் 1 முதல் 10,000 வரை எண்கள் கொண்டதாக இருக்க வேண்டும். அவைகள் பயன்படுத்தப்பட்டபின் அதே எண்கள் கொண்ட ரசீதுகளை ஏ.பி.போன்ற எழுத்துக்களை முன் சேர்த்து பயன்படுத்த வேண்டும். மேற்படி ரசீதுகளை பயன்படுத்துவதற்கு முன் நகராட்சி மன்றத்தின் முத்திரையை போட்டுக் கொள்ள வேண்டும். நகராட்சி முத்திரையை போட்டுக் கொள்ளாமல் ரசீதுகளை விநியோக்கும் உரிமதாரர்கள் பேரில் கடும் நடவடிக்கை எடுத்து அவர்களது விளக்கம் பெறாமலேயே கட்டுப்பாட்டினை மீறியதாக கருதி குத்தகையினை ரத்து செய்யப்படும்.

34. குத்தகை உரிமைதாரர்களும், சுங்கம் வசூல் செய்யும் உரிமை பெற்றவர்க்கும், நகரமன்றம் நிர்ணயித்திருக்கின்ற விகிதத்திற்கு அதிகமாவது குறைவாகவாவது வசூல் செய்யக்கூடாது. செய்தால் ஆணையருக்கு தண்டம் விதிக்க அதிகாரமுண்டு . நகரமன்றத்திற்கு குத்தகை உரிமையை ரத்து செய்ய தெரிவித்து நகர மன்ற முடிவின்படி நடவடிக்கை எடுப்பார்.

35. குத்தகை உரிமைதாரர் ஆணையரின் அதிகாரத்திற்கும், அவர்களுடைய சிப்பந்திகளின் மேற்பார்வைக்கு உட்பட்டு நடக்க வேண்டும். ஆணையர் அவர்களால் அப்போதைக்கப்போது அனுப்பப்படும் ஆணைகளுக்கு குத்தகைதாரர்களும் அவருடைய ஊழியர்களும் கட்டுப்பட்டவராவார்கள்.

36. குத்தகை உரிமைதாரராவது அல்லது அவருடைய வேலைக்காரராவது ஒப்பந்தக் கட்டப்பாடுகளின் படியாவது இதர விளம்பரத்தால் கண்ட எந்தப்பொது (அ) தனி நிபந்தனைகளின்படியாவது நடக்கத்தவறினால் அவர்கள் குற்றசச்சாட்டுக்கு உள்ளாவார்கள். இப்படி செய்தாவது மன்ற வழியாக ஒப்பந்தத்தை நடத்த வகையானது (அ) வேறு வகையில் குத்தகைதாரரின் பெயரில் நடவடிக்கை எடுத்துச் சொல்வதையாவது தடை செய்வதாகாது.

37. மேற்கண்ட, நிபந்தனைகளுக்கு விரோதமாக குத்தகை உரிமைதாரர் நடந்து கொண்டால் அவர்மீது அபராதம் விதிக்கவோ அல்லது குத்தகையை ரத்து செய்யவோ மறு ஏலம் போடவோ ஆணையருக்கு அதிகாரம் உண்டு. ஆதலால் உண்டாகும் நஷ்டத்திற்கு குத்தகை உரிமைதாரரும் அன்னார்களுடைய வாரிசுதாரர்களும் உட்பட பொறுப்பாளியாவார்கள்.

38. நகரமன்ற அல்லது ஒப்பந்தக் குழு கருதினால் முன் அறிவிப்பு கொடுத்து குத்தகை உரிமை அல்லது கட்டணம் வசூலிக்கும் உரிமை காலத்தில் இடை நடுவே எந்த நிலையிலும் குத்தகை உரிமையை நிறுத்திவிட ஆணையருக்கு அதிகாரமுண்டு . அப்படி நிறுத்தினால் குத்தகைதாரருக்கு வீதப்படி தொகை தள்ளுபடி செய்துதரப்படும். ஆனால் குத்தகைதாரருக்கு வேறு யாதோரு ஈடும் கேட்க உரிமையில்லை.

39. ஏலம் முடிவான பிறகு ஏலம் எடுத்தவர் பொறுப்பு உள்ளவரா? இல்லையா? என்று ஆணையருக்கு சந்தேகம் ஏற்பட்டால் முழு குத்தகை தொகையை பொறுப்பாக செலுத்த வேணடுமென்றாவது அல்லது ஒப்பந்தத்தில் நிபந்தனைகளின்படி செலுத்த வேண்டிய தொகைகளை சரியாக செலுத்திக் கொண்டு வருவதாக ஜாமின் பத்திரம் எழுதிக்கொடுக்கும்படியாவது ஆணை பிறப்பிக்க ஆணையருக்கு அதிகாரமுண்டு. தவறினால் 23-ன் நிபந்தனையில் உள்ளபடி நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் குத்தகைதாரர் ஒப்பந்தப்பத்திரத்தை தன் சொந்த செலவில் பதிவு செய்து தர வேண்டும்.

40. ஒவ்வொரு ஏலத்திற்கும் பங்கு கொள்ளும் கேள்விதாரர்களுக்கு மன்றம் உச்ச கேள்வியை ஒப்புக்கொண்டபின் அடுத்துள்ள உயர்ந்த கேள்விதாரரின் வைப்புத் தொகையை வட்டியில்லாமல் திருப்பிக் கொடுக்கப்படும். அவ்வாறு பெற்றுக் கொள்ளப்படாத தொகைகள் அவரவர்கள் பெயரில் நகராட்சி வைப்புக் கணக்கில் வைக்கப்படும்.

41. உச்ச ஏலக்கேள்வி/ உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை மன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன், ஆணையர் குறிப்பிடும் நாட்களுக்குள் உரிமதாரர் தன சொந்த செலவில் போதுமான முத்திரை காகிதத்தில் தன்னையும், தன் சொத்துக்குரியவர்களையும், நிர்வாகிகளையும், ஆட்சியாளர்களையும் கட்டுப்படுத்தி ஒரு ஒப்பந்தப்பத்திரம் எழுதி அதை பதிவு செய்து நகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும்.

42. நகராட்சியால் வழங்கப்படும் படிவத்தினை பூர்த்தி செய்து நிர்ணயிக்கப்பட்ட இடத்தில் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படத்தை ஒட்டி கையொப்பம் இட்டு கோரிய தகவல்களை இணைத்து குறிப்பிடும் தேதியில் சமர்ப்பித்தல் வேண்டும்.

43. உரிமம் பெற்றவர் ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்க தவறினால், அவரால் கட்டப்பட்டு வைப்புத் தொகையை அவர் இழந்து விடுவதல்லாமல் மறு ஏலம் விடுவதால் ஏற்படும் இழப்பையும் பிற செலவையும் ஈடு செய்ய வேண்டியவராவார். மறு ஏலத்தில் கூடுதல் தொகை கிடைத்தால் அதில் எவ்வகை உரிமையும் கோர முதல் ஏலத்தில் தவறியவருக்கு கிடையாது. அது போல் முதல் ஏலத்தில் எடுத்தவர் தவறுக்காக உரிமத்தை மன்றத்தின் கருத்துப்படி நகராட்சியே இலாக்கா மூலம் நடத்த நேர்ந்து அதனால் எந்த வகையான இழப்பு ஏற்பட்டாலும் முதல் ஏலத்தில் தவறியவரே முழு பொறுப்பாளியாவர்.

44. குத்தகை விடப்படும் அசையாச் சொத்துக்கள் அனைத்திற்கும் குத்தகைதாரர் மத்திய அரசுக்கு செலுத்த வேண்டிய குத்தகை தொகையின் மதிப்பில் 18% சேவை வரி நகராட்சிக்கு செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்த மறுப்பு தெரிவித்து நீதிமன்றத்திற்கு சென்றால் அது நகராட்சியினை கட்டுப்படுத்தாது என தெரிவிக்கப்படுகிறது,

45. நகராட்சிக்கு சொந்தமான குத்தகை தொகை மற்றும் கடைகளுக்கான வாடகையினை ஒவ்வொரு மாதமும் 5-ம் தேதிக்குள் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்த தவறும் பட்சத்தில் மாதம் 1.க்கு ரூ.100/-க்கு அபராதவட்டி ரூ.2/- வீதம் வசூல் செய்யப்படும். பிரதி மாதம் 5-ம் தேதிக்குள் குத்தகை தொகை மற்றும் கடை வாடகை செலுத்தாத குத்தகைதாரர்களின் பட்டியலை அந்தந்த மாதம் நடை பெறவிருக்கும் நகரமன்றத்திற்கு அதன் குத்தகையை ரத்து செய்ய ஆணையர் தெரிவிப்பார். நகரமன்றம் அதன் மீது குத்தகையினை ரத்து செய்யவோ, கால அவகாசம் கொடுக்கவோ, மறுஏலம் விடவோ அதிகாரம் உண்டு. அப்படி மறுஏலம் விடுவதால் ஏற்படும் சகல நஷ்டத்திற்கும் அன்னாரும் அன்னாருடைய வாரிசுதாரர்களும் உட்பட பொறுப்பாவர்கள்.

46. உரிம கட்டுப்பாடுகளை சரிவர நிறைவேற்ற தவறுகிறவர்கள் விஷயத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றியும், மேற்படி உரிமத்தில் நிர்வாகம் சம்பந்தமாகவும் மன்றம் முடிவு செய்யும் வரை உரிமத்தை நிறுத்தி வைக்கவும், மேற்படி சொத்தையோ அல்லது உரிமையையோ கைப்பற்றவும் அதை நேரடியாக துறை மூலம் நடத்தவும் ஆணையருக்கு அதிகாரம் உண்டு. அவ்விதம் நகராட்சியே கட்டணம் தண்டல் செய்வது சம்பந்தமாக ஏற்படும் எல்லா செலவையும், இழப்பையும் உரிமதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

47. உரிமம் பெற்றவர் உரிமகால கெடு தேதிக்கு முன்பாகவே ஒப்பந்தப் பத்திரம் எழுதி கொடுத்திருந்தால் அன்றி தம் சொந்த செலவில் தாமே எல்லாப் பொறுப்புகளையும் ஏற்று நகராட்சி அலுவலகத்தில் அது சம்பந்தமான நகல்களைப் பெற வேண்டும். தவறினால் உரிமம் பெற்ற இடத்தில் உரிமதாரர் உரிமம் ஏற்க அனுமதிக்கப்பட மாட்டார்.

48. குத்தகைதாரர் செலுத்தும் வைப்புத் தொகை, மின் கட்டண முன் பணத் தொகை ஆகியவைகளுக்கு எந்தவித வட்டியும் கொடுக்கப்பட மாட்டாது.

49. சாதாரணமாக காசோலை (செக்) மூலமாக குத்தகை தொகையை செலுத்தக் கூடாது. கேட்பு வரைவோலை (டிமாண்ட் டிராப்ட்) மூலமாக பணம் அந்தந்த மாதங்களில் 5–ம் தேதிக்குள் நகராட்சி கணக்கில் வரவு வைக்கத்தக்க நிலையில் முன்னதாகவே கொடுக்கப்பட வேண்டும். அவ்விதம் காலத்திற்கு வரவில்லையானாலும் எதிர்பாராத சந்தர்ப்பத்தில் பணம் நகராட்சி கணக்கில் வரவில்லையானால் நிபந்தனை 45–ல் குறிப்பிட்டுள்ளபடி வட்டி செலுத்த வேண்டும்.

50. நகரமன்ற அனுமதியின்றி குத்தகைதாரர் மற்றொரு மாற்று வாடகைக்கு உட்குத்தகைக்கு விடக்கூடாது.

51. குத்தகைதாரர் இறந்து போனாலும் கடன்காரராய் போனாலும், அல்லது வேறு காரணங்களினால் இயலாதவர் ஆனாலும் அவருடைய சந்ததினரை உரிமையாளர் கருத்தை நிறைவேற்றுபவர் சொத்தை பாவிப்பவர் அல்லது அவருடைய சொத்தை பெற்றவர் இந்த அறிக்கையில் கண்ட நிபந்தனைகளின்படி குத்தகை உரிமையை நடத்தி வரலாம். ஆனால் ஒப்பந்தத்தை தள்ளுபடி செய்துவிட வேண்டுமென ஆணையர் அவர்கள் தீர்மானித்தால் குத்தகையை ரத்து செய்யலாம்.

52. குத்தகை உரிமைக்கு விடப்பட்ட சொத்திற்கு நகராட்சி செலுத்த வேண்டிய அரசு வருவாய் துறை தீர்வைத் தொகையை குத்தகைதாரர் நகராட்சிக்கு செலுத்த வேண்டும்.

53. ஒரு நாள் என்பது இரவு 12 மணியிலிருந்து அடுத்த இரவு 12 மணி வரை என்பதாகும்.

54. எந்தக் காரணத்தைக் கொண்டும் உரிமையாணை தொகையில் எந்த பாகத்தையும் தள்ளுபடி செய்யும்படி கேட்கவும் இந்த ஏல அறிக்கையில் வரையறுத்திருக்கும் வீதத்திற்கும் அதிகமாக வசூலித்து கொள்ளும்படி இசைவு அளிக்கும்படி கேட்கவும் உரிமையாணை பெற்றவருக்கு எவ்வகையிலும் உரிமையில்லை. நகராட்சியின் கணக்கு தணிக்கை செய்வோர் ஏதாவது தொகை உரிமைதாரரிடமிருந்து வசூலிக்க உத்திரவிட்டால் அத்தொகையை செலுத்த உரிமைதாரர் கட்டுப்பட்டவராவார்.

55. உரிமையாணை பெற்றவர் தான் உரிமத்திற்கு ஏற்றுக்கொண்ட முழு உரிம இடத்தை தன் சொந்த செலவில் எப்பொழுதும் தூய்மையாக பராமரிக்க வேண்டும். இதில் தவறுகள் ஏதேனும் குறைகள் காணும் பட்சத்தில் நகராட்சி சுகாதார பணியாளர்களைக் கொண்டு பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதனால் ஏற்படும் சகல செலவுகளையும் உரிமதாரரிடம் வசூல் செய்யப்படும். உரிம காலம் முடிந்தவுடன் உரிம இடத்தை நகராட்சி வசம் நல்ல நிலையில் ஒப்புவிக்க வேண்டும். அவ்வண்ணம் செய்யத் தவறினால் அதனால் ஏற்படும் சகல செலவுகளையும் உரிமதாரரிடம் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

56. உரிம காலத்தில் உரிமையாணை பெற்றவர், பிறர் பேரிலாவது அல்லது உரிமையாணையை பெற்றவர் பேரிலாவது வழக்குகள் பிறரால் தொடர்ந்தால் அவைகளுக்காக ஏற்படும் பொருள் செலவினை நகராட்சி ஏற்றுக் கொள்ள முடியாது. நகராட்சி எவ்விதத்திலும் பொறுப்பு ஏற்று கொள்ளாது. மேலும் உரிம காலத்தில் உரிமையாணைப் பெற்றவர் வசூல் செய்வதில் எவ்வித தடங்கல் / தாமதம் அல்லது வேறு இடையூறுகள் ஏதும் ஏற்பட்டாலும் அது சம்பந்தமான வழக்குகள் தொடர்ந்தாலும், அவர்கள் பொறுப்பிலேயே அதற்கான இழப்பீடுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். நகராட்சி எவ்விதத்திலும் பொறுப்பல்ல.

57. உரிம காலத்திற்குள் இந்த ஏலக் கட்டுப்பாடுகளிலுள்ள தினசரி மார்கெட், வார சந்தை, ஆடு அடிக்கும் இடம் முதலியன தற்பொழுதுள்ள இடங்களிலிருந்து வேறு இடங்களுக்கு அரசினரால் அல்லது நகராட்சியால் மாற்றப்பட்டால் அவ்விடத்தில் உரிமதாரர் அங்காடி கட்டணம் தண்டிக்கொள்ள வேண்டியது. அதற்காக நகராட்சியிடமிருந்து எவ்வித இழப்பையும் அல்லது உரிமையை ரத்து செய்யும்படியோ கேட்க உரிமதாரருக்கு உரிமை இல்லை.

58. உரிமயினங்களில் கட்டணம் தண்டுவது பற்றி உரிமதாரரின் தவறு காரணமாக கட்டணத்தை நீதிமன்ற உத்திரவின்படி நிர்வாகமே வசூல் செய்யும் படி நேர்ந்தால், அதன் பொருட்டு ஏற்படும் செலவை உரிமதாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும். நகராட்சியின் இழப்பிற்கும் உரிமதாரர் பொறுப்பாவார்.

59. எந்த விதிகளின்படியாவது நடக்கத் தவறிய உரிமயாணை பெற்றவர் அவருடைய வைப்புத் தொகையை இழப்பதுடன் ஒப்பந்தத்திலிருந்து அவர் நீக்கப்படுவதுடன் அவர் செய்யும் ஒவ்வொரு குற்றத்திற்கும் உசிதம் போல ஆணையரால் அபராதம் விதிக்கப்படும் சொத்துக்கு ஏதேனும் கெடுதி ஏற்பட்டு அதனால் நகராட்சிக்கு பொருட்கேடு / இழப்பீடு ஏற்பட்டாலும் அல்லது உரிமதாரர் கட்டப்பாடுகளின்படி நடவாமல் மீறி நடந்து நகராட்சிக்கு பொருட்கேடு ஏற்பட்டாலும் அவ்வாறு ஏற்பட்ட பொருட்கேடுகளுக்கு இழப்பீடு (Compensation) தர உரிமதாரர் கட்டுப்பட்டவராவார். இழப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதை மன்றத்தால் தீர்மானிக்கப்படும். அந்த தீர்மானமே முடிவானது பிறகு நகராட்சியே மேற்படி உரிமையை நடத்த உரிமையுண்டு. அவ்வாறு நடத்துவதில் நகராட்சிக்கு பொருட்சேதம் ஏற்படுமேயானால் அதற்கு உரிமதாரரே முழு பொறுப்பாளி ஆவார். அவரால் கட்டப்பட்டிருக்கும் தொகையையும் அவர் இழந்து விடுவார். இங்ஙனம் நகராட்சி நடத்துவதில் கூடுதல் ஊதியம் கிடைத்தால் அதில் அவருக்கு பங்கு கிடையாது. நகராட்சிக்கு உரிமைதாரர் கொடுக்க வேண்டிய தொகைகள் பாக்கி நின்றால் அவர் கட்டியிருக்கும் தொகையில் இருந்து வரவு வைக்கப்படும் அல்லது அவருக்கு வேறு வகையில் நகராட்சியால் கொடுக்கப்பட வேண்டிய எந்த தொகையிலிருந்தாவது ஈடுசெய்த கொள்ளவும் அல்லது சட்டப்படி நடவடிக்கை எடுத்து வசூலிக்கவும் நகராட்சிக்கு உரிமை உண்டு.

60. உரிம காலத்தில் உரிமையாணைக்கு விடப்பட்டுள்ள இடங்களில் சட்டம் ஒழுங்கு (லா அண்ட ஆர்டர்) அமைதி நிலவ அவ்வப்போது உரிமயாணை பெற்றவர் தக்க நடவடிக்கை எடுத்து கொள்ள வேண்டும். இதில் அவர் தவறுவார்களேயானால் சட்டப்படி தக்க நடவடிக்கை அவர்கள் பேரில் நகராட்சியால் எடுக்கப்படும்.

61. ஆணையரின் முன் அனுமதி பெறாமல் குத்தகை உரிமைக்கு ஒப்புவிக்கப்படும் இடத்தில் குத்தகைதாரரோ அல்லது யாதொரு நபரோ யாதொரு விதமான கட்டிடமோ, கொட்டகையோ நகராட்சி சட்டம் 3(3) விரிவுப்படி கட்டிடம் என்ற சொல்லக்கூடியவை நிறுவக்கூடாது.

62. எந்த பொது அல்லது சிறப்பு நிபந்தனைகளின் படி குத்தகைதாரர் நடக்கத் தவறினால் ஒவ்வொரு தவறுதலுக்கும் ரூ.100/—க்கு அதிகபடாமல் ஆணையர் தண்டம் விதிக்க அதிகாரமுண்டு.

63. குத்தகை உரிமைதாரர் வசம் ஒப்புவிக்கப்பட்ட சொத்துகளுக்கும், குத்தகை உரிமைதாரராலோ அவரது கவனக்குறைவினாலோ ஏதேனும் நேர்ந்தாலும் அல்லது 62–வது நிபந்தனைபடி விதிக்கப்படுகின்ற தண்டனையினாலும் திருந்தாவிட்டாலும் அதனால் உண்டாகும் இழப்பிற்கு ஈடுகொடுக்க கடமைப்பட்டவராவார். ஈடுதொகை இவ்வளவு என்பது அவ்வப்போது மன்றத்தால் தீர்மானிக்கப்படும் தீர்மானம் முடிவானது. அது நீதி மன்றங்களில் வாதிக்கத்தக்கதல்ல.

64. ஆணையர் விதிக்கும் தண்டத்தை மூன்று தினங்களுக்குள் செலுத்திவிட வேண்டும். தவறினால் குத்தகை உரிமைதாரரின் வைப்புத்தொகை பணத்திலிருந்து வரவு வைத்துக் கொள்ளப்படும். அவ்வாறு வரவு வைத்துக்கொள்ளப்பட்ட தொகையை குத்தகை உரிமைதாரருக்கு அறிவிக்கப்பட்ட தேதி முதல் ஏழு நாட்களுக்குள் செலுத்தி வைப்புத்தொகையை நிறைவு செய்ய வேணடும். அப்படி செய்யத்தவறினால் குத்தகைதாரர் ஒப்பந்தத்தை ரத்து செய்து மறு ஏலம் விடவும் ஆணையருக்கு அதிகாரமுண்டு.

65. தொற்று வியாதி பரவுவதை தடுக்கவாவது, வேறு ஏதாவதொரு எதிர்பாராத காரணத்திற்காவது அவசியமானால் ஆணையர் சந்தைகளை தற்காலிகமாக மூடலாம். அப்படி மூடியிருக்கும் சமயம் அல்லது காலத்திற்கு ஒப்பந்ததாரர் யாதோரு நஷ்ட ஈடும் கோரமுடியாது. நகராட்சி அல்லது நெடுஞ்சாலை பொதுப்பணித்துறையினரால் ஆக்கிரமிப்பு கடைகளை அகற்றினால் ஏற்படும் நஷ்டத்திற்கும், அரசு விடுமுறையோ அல்லது பந்த் போன்ற போராட்டக் காலத்தில் சந்தை மூடப்படும் நேரம் அல்லது காலங்களில் சந்தை மூடப்படும் நேரங்களில் அல்லது காலங்களுக்கு குத்தகைதாரர் எந்த வித நஷ்ட ஈடும் கோரக்கூடாது.

66. ஒப்பந்தத் கட்டுப்பாடுகளை மீறி நடந்த குற்றத்திற்காக உரிமத் தொகையை பறிமுதல் செய்வதில் மன்றத்தின் தீர்மானமே முடிவானது ஆகும்.

67. குத்தகைக்கு எடுத்த குத்தகை இனங்கள், நகராட்சி கடைகளை உள் குத்தகைக்கு விடக்கூடாது. உள் குத்தகை கண்டறியப்பட்டால் குத்தகை விதி மீறல் எனக் கருதி குத்தகை ரத்த செய் நேரிடும்.

68. உரிமம் பெற்ற இடத்தில் உரிமதாரர் வேலைக்கு அமர்த்தப்பட்ட சிப்பந்திகள், ஏஜெண்டுகள் முதலியவர்கள் பெயர் மற்றும் இதர தேவைப்படும் விவரங்களை அவ்வப்போது ஆணையருக்கு தெரிவிக்க வேணடும் அவர்கள் ஒழுங்காக நடப்பதற்கு உரிமைதாரரே பொறுப்பாவார். அவர்கள் ஒழுங்காக நடக்க தவறிய காரணத்திற்காகவும், வேறு எந்த காரணத்திற்காகிலும் உரிம காலத்தில், சம்மந்தப்பட்ட நபர்கள் வேலை செய்யக்கூடாது என்று ஆணையர் தெரிவித்தால், உரிமைதாரர் அதற்கு கட்டுபட்டு அந்த சிப்பந்திகளை வேலையிலிருந்து நீக்கி விட வேண்டும். ஆணையரின் எழுத்து மூலமான அனுமதி இல்லாமல் மறுபடியும் அவர்களை வேலையில் சேர்த்துக் கொள்ள கூடாது. உரிமைதாரர் 14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை பணியில் அமர்த்தக் கூடாது. இதற்கான உறுதி மொழியினை ஒப்பந்தத்தில் அளிக்க வேண்டும்.

69. உரிமை காலத்தில் இழப்பு நேர்ந்தாலாவது அல்லது வேறு காரணங்களை கொண்டாவது உரிமையாணை தொகையில் தள்ளுபடி கேட்க உரிமைதாரருக்கு பாத்யதை கிடையாது. ஒப்படைக்கப்பட்ட கட்டிடங்கள் மராமத்து செய்வதினாலாவது அல்லது அவைகளை சீர்திருத்தம் செய்வதினாலாவது உரிமையாணை பெற்றவருக்கு ஏதாவது தற்காலிக இடைஞ்சல் ஏற்பட்டால் அதற்காக நஷ்ட ஈடு கேட்க கூடாது. ஆனால் உரிமைதாரரிடம் ஒப்படைக்கப்பட்ட கட்டிடங்கள் முழுவதையும் மராமத்து பணிக்காக நகராட்சி எடுத்துக் கொண்டு மராமத்து வேலைகள் முடிந்த பிறகு திரும்ப அவர்களிடம் ஒப்படைக்கும் நாள் வரையிலும் உள்ள காலத்திற்கு ஏலத்தொகையில் விகிதாச்சாரப்படி தொகை தள்ளுபடி செய்து கொடுக்கப்படும். மன்றம் நிர்ணயிக்கும் தொகைக்கு மேல் உரிமைதாரர் நஷ்ட ஈடு கேட்க அவருக்கு உரிமை இல்லை.

70. உரிமைதாரருக்கு கொடுக்கப்படும் அறிக்கைகள் அல்லது உத்திரவுகள் அவரின் விலாசத்திற்கு அல்லது தொழில் செய்யும் இடத்திற்கு அனுப்பப்பட்டால் அல்லது மேற்படி இடத்தில் ஒட்டப்பட்டால், அவரிடம் சரியான முறையில் சார்வு செய்ததாக கருதப்படும்.

71. தொத்து நோய் (எபிடமிக்ஸ்) பரவாமல் இருக்கும் பொருட்டு உரிமைக்கான இடங்களை சிறிது காலத்திற்கு மூடும்படி சுகாதார அதிகாரியால் உத்திரவிட நேர்ந்தால் அந்த காலத்திற்காக உரிமைதாரருக்கு விகிதாச்சாரத்தின்படி உரிமையாணைத் தொகை மன்ற ஒப்புதலின் பேரில் தள்ளுபடி செய்து கொடுக்கப்படும்.

72. நிர்வாகக் காரணங்களுக்காகவும் மற்றும் எதிர்பாராத சூழ்நிலை காரணமாகவும், மன்றத்தின் முடிவின்படி முன்அறிவிப்பு கொடுத்து உரிம காலத்தின் இடையில் எந்த நிலையிலும் உரிமத்தினை நிறுத்திவிடவோ, ரத்து செய்யவோ ஆணையருக்கு அதிகாரம் உண்டு. அப்படி நிறுத்துவதற்காக உரிமம் பெற்றவருக்கு ஏல விகிதாச்சாரப்படி அக்காலத்திற்கு மட்டும் தொகை தள்ளுபடி செய்து தரப்படும். ஆனால் உரிமம் பெற்றவருக்கு வேறு யாதொரு இழப்பீடும் கேட்க உரிமை இல்லை.

73. வரையறுக்கப்பட்ட உரிமை இடத்தில் முன் பகுதியிலும் அல்லது அதற்குள் இருக்கும் நடைப்பாதைகளிலும், வழிகளிலும் பொது மக்களுக்கோ அல்லது இதர வியாபாரிகளுக்கோ எந்த வித இடைஞ்சலும் இல்லாமல் உரிம இடத்தை வைத்திருக்க வேண்டும்.

74. உரிமையாணைக்கு விடப்பட்ட கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ள எல்லா மின்சார சாதனங்களும் நகர சபையின் சொத்தாகவே இருக்கும். மேற்படி கட்டிடத்திற்கு மின் இணைப்பு கொடுப்பதற்கான டேவணித் தொகை உரிமையானைதாரரே கட்டுவதுடன் மின்சாரம் உபயோகப்பதினால் ஆகக்கூடிய செலவுகளை உரிமையாணைதாரரே கட்டி வர கட்டுப்பட்டவர் ஆவார். இத்தொகைகளை சரிவர கட்ட தவறினாலும் அல்லது வேறு ஏதேனும் தவறுகள் செய்தாலும் மின்சார சட்ட திட்டங்களின் பேரில் உரிமையாணைதாரர் மேல் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேற்படி இடத்திலுள்ள மின் இணைப்பு கண்டிப்பாக உரிமையாணைதாரரின் பெயருக்கு தரப்படமாட்டாது. இவ்விணைப்பு ஆணையர் பெயரிலேயே இருந்து வரும் உரிமையாணை பொறுப்பேற்று மின் இணைப்பு தனியே மனு செய்தால் மேலே சொன்ன தொகைகள் கட்டியபின் உரிமையாணை இடத்திற்கு மின் இணைப்பு கொடுக்கப்படும்.

75. இந்த ஏல அறிவிப்பில் கண்டுள்ள யாதொரு நிபந்தனை சட்டத்திட்டங்கள் விதிகள் அரசு ஆணைகள் இதர ஆணைகள் இவை அனைத்தும் சம்மந்தமாகவும் மன்றம் / ஆணையர் கொடுக்கும் விளக்கமே (INTERPRETATION) முடிவானது.

76. அரசு தணிக்கை துறையினர் கணக்கு தணிக்கை செய்த பிறகு ஏதாகிலும் தொகையை குத்தகைதாரரிடமிருந்து வசூல் செய்ய ஆணையிட்டால் அந்த தொகை ஈடு செய்வதற்கு குத்தகை உரிமைதாரர் கட்டுப்பட்டவராவார்.

77. குத்தகை உரிமைதாரர் குத்தகை உரிமை காலம் முடிவடைந்து 31.03.2024– ஆம் தேதியன்று மாலை குத்தகை சம்மந்தப்பட்ட வகைகளையும் இடங்களையும் நகராட்சி வசம் நல்ல நிலையில் திருப்பி ஒப்படைக்க வேண்டும். இவ்வண்ணம் செய்ய தவறினால் அதனால் ஏற்படும் சகல செலவினங்களையும் குத்தகை உரிமைதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

78. ஒப்பந்த திட்டங்களைப் பற்றியும் வ.எண் 23–ல் தெரிவித்துள்ள நிபந்தனையில் குறித்த உடன்படிக்கை காணும் யாதொரு சொல் (அ) வாக்கியத்தைப் பற்றியும் ஆணையர் அல்லது நகரமன்றம் செய்யும் தீர்மானமே முடிவானது. அதன்படி குத்தகை உரிமைதாரர் நடக்க கடமைப்பட்டவராவார்.

79. எல்லா குத்தகைகளையும் பொருத்தும் ஆணையரின் ஆணைகளின் மீது மன்றத்திற்கு முறையீடு செய்து கொள்ள குத்தகைதாரர்களுக்கு உரிமை உண்டு. ஆனால் மன்றம் முறையிட்டு மனுவை பரிசீலித்து பைசல் செய்யும் வரை ஆணையரின் உத்திரவுபடியே செயல்பட வேண்டும்.

80. மேலே குறிப்பிட்ட எந்த நிபந்தனைகளாவது நீக்கவோ அல்லது சேர்க்கவோ நகரமன்றத்திற்கு தான் அதிகாரம் உண்டு . எந்த நிபந்தனையாவது நீக்கவோ (அ) சேர்க்கவோ நகரமன்றத்திற்கு மேல் முறையீடு செய்தால் அதனைப்பற்றி பரிசீலனை செய்து முடிவு எடுக்க நகர மன்றத்திற்கு உரிமை உண்டு. அது நீதிமன்றங்களில் வாதிக்கத்தக்கதல்ல.

81. மேலே குறிப்பிட்ட வ.எண் 79–ல் தெரிவித்துள்ள நிபந்தனையும் மீறி ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி ஏலத்தை நிறுத்த நீதிமன்றங்களில் தடையுத்திரவோ வழக்கோ தொடருபவர்கள் அந்த குறிப்பிட்ட குத்தகை உரிமை இனத்திற்காக நகராட்சிக்கு ஏற்படும் குத்தகை உரிமை தொகைக்கும் மற்றும் சகல நஷ்டத்திற்கும் அன்னாரும், அன்னாருடைய வாரிசுதாரர்களும் உட்பட பொறுப்பாவார்கள்.

82. எல்லா குத்தகை உரிமைக்கு 1920 வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கும் பொதுநல சட்டத்திற்கும் நடைமுறையிலுள்ளதுடன் அவ்வப்போது வெளியாகும் அரசாணைகளுக்கும் சிறப்பு நிபந்தனைகளுக்கும் உட்பட்டவையாகும்.

83. மேலே கூறப்பட்ட அனைத்து பொது கட்டுப்பாடுகளும் இதில் கண்டுள்ள எல்லா குத்தகை உரிமை இனங்களுக்கும் பொருந்தும். மேற்கூறப்பட்ட எல்லா பொது கட்டுபாடுகளும் அந்தந்த குத்தகை உரிமை இனங்களில் கூறப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகளும் குத்தகை உரிமை பத்திரத்தின் ஒரு பகுதியாக பாவிக்கப்படும்.

84. நகராட்சி சொத்துக்கு ஏதேனும் உரிமைதாரரால் சேதம் ஏற்பட்டால் அதனையும் வைப்புத் தொகையிலிருந்து ஈடு செய்யப்படும்.

85. தணிக்கை ஆட்சேபணை ஏதேனும் எழுப்பப்பட்டால் அதன்படி தொகையினையும் இதிலிருந்து ஈடு செய்யப்படும்.

86. உரிமத்திற்காக ஒப்படைக்கப்பட்ட நகராட்சி கட்டிடங்களில் யாதொரு மாறுதல்களும் மற்றும் தீப்பற்றக்கூடிய வகையில் அடுப்பு வைத்து தொழில் நடத்திட மன்ற முன் அனுமதியின்றி உரிமைதாரர் செய்யக் கூடாது. அவ்வாறு செய்தால் குத்தகை உரிமையை மன்ற அனுமதியுடன் ரத்து செய்யப்படும்.

87. குத்தகை உரிமை கோரும் அனைவரும் அன்னார் பெயரில் உள்ள ரேஷன் அட்டை நகல், தேர்தல் அடையாள அட்டை, ஆதார் அடையாள அட்டையின் நகல் மூன்று போட்டோ போன்ற ஆதாரத்தினை குத்தகை கோருவதற்கு முன்பே சமர்ப்பிக்க வேண்டும்.

88. குத்தகை கோருபவர்கள் தமிழக அரசின் சட்டத்திற்குட்பட்டும் 1920–ம் வருடத்திய மாவட்ட நகராட்சிகளின் சட்டத்திற்குட்பட்டும் ஏலத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

89. குத்தகை இனம் 1 முதல் 10 வரை உள்ளதற்கு நகராட்சியால் விதிக்கப்பட்ட தனிக்கட்டுப்பாடுகள்/சிறப்பு ஏல நிபந்தனைகளுக்கு உட்பட்டு குத்தகைதாரர் நடந்துக் கொள்ள வேண்டும்,'.

90. நகராட்சி அனுமதிக்கப்படும் குத்தகை தொகைக்கு மத்திய அரசுக்கு செலுத்த வேண்டிய சேவை வரி, வருமானவரி , விற்பனை வரி மற்றும் இதர வரிகள் கட்டாயம் செலுத்த வேண்டும், எலம்/ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையின்படி செலுத்த தவறி நீதிமன்றத்திற்கு சென்றால் அது கட்டுப்படுத்தாது.

91. நகராட்சி அனுமதிக்கப்படும் குத்தகை தொகைக்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகையினை செலுத்த நகராட்சி மூலம் செய்து முடிக்கப்படும் பணிகளுக்கான பட்டியலில் இருந்து ஈடு செய்ய இயலாது.

**அலுவலகக்குறிப்பு :** அரசாணை (நிலை) எண்.181 நாள் : 19.09.2008–ல் தெரிவித்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும், வரிசை எண். 1 முதல் 91 முடிய உள்ள ஏலக் கட்டுப்பாடுகளுக்குட்பட்டு மூன்றாண்டுகளுக்கு 2021–2024 ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்காகும் செலவுத் தொகைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 3286/2020/அ1

24. வாணியம்பாடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்குட்பட்ட வார்டுகளான 14,15,16,17,18,28,29,30,31,32,33 மற்றும் 34 வரை 12 வார்டுகளை தனியார் மூலம் துப்புரவு பணிகளை மேற்கொள்ள வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்:10896/2012/பி3 நாள்:30.07.2012-ம் தேதிய கடிதத்தின் படியும் இந்நகர மன்றம் தீர்மானம் எண்:1285 நாள் 29.12.2011-ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட புள்ளி விகதத்தின் அடிப்படையிலும் மற்றும் நிபந்தனைகளின் படி1 நபருக்கு 1 நாளைக்கு தின கூலி ரு.301/- ஆகவும் மற்றும் (ESI P.F மற்றும் safety Equipments) உட்பட ருபாய்.81/- ஆகவும் மொத்தம் ரு.382/- என தூய்மை பணிகள் தனியார் முலம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது மேலும் கடந்த ஆண்டு நகர மன்ற தீர்மானம் எண்:162 நாள்:26.12.2019-ன் படி அருனை கம்ப்பியூட்டர் பார்ம்ஸ் வாணியம்பாடி நிறுவனத்திற்கு 26.12.2019-ம் தேதி முதல் 10.01.2021 வரை ஒரு வருட காலத்திற்கு நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கப்பட்டது. தற்போது 10.01.2021 உடன் அனுமதி காலம் முடிவடைகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்:10896/2012/பி3 நாள்:30.07.2012 மறுபடியும் ந.க.எண்:360813/2018/ஜே3 நாள் 11.12.2018 தேதிய செயல்முறை உத்தரவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை முழுமையாக செயல்படுத்த வாணியம்பாடி நகராட்சிக்கு 166 நபர்களை தனியார் மூலம் அமைத்துக்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் நகர மன்ற தீர்மானம் எண்:162 நாள்:26.12.2019-ன் படி தனியார் மூலம் பகுதி I-ற்கு 85 நபர்களையும் மற்றும் பகுதி II-ற்கு 81 நபர்களை ஆக மொத்தம் 166 நபர்களை அருனை கம்ப்பியூட்டர் பார்ம்ஸ் வாணியம்பாடி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவில் அனுமதிக்கப்பட்ட காலஅளவு 10.01.2021 அன்றுடன் முடிவடைந்துள்ளது.

அருணை கம்ப்பியூட்டர் பார்ம்ஸ் வாணியம்பாடி நிறுவனம் தனது 22.12.2020 ஆம் தேதிய கடிதத்தில் ஒப்பந்தப்பணியினை ஓராண்டு காலம் நீட்டிப்பு செய்து வழங்குமாறும் தற்போதைய ஒப்பந்தத்தின் படியே பணியினை செய்யவும் சம்மதம் தெரிவித்துள்ளார்.

துப்புரவு ஆய்வாளர்கள் தங்களது 22.12.2020 தேதிய அறிக்கையில் வாணியம்பாடி அருணை கம்ப்பியூட்டர் நிறுவனத்திற்கு ஒப்பந்த காலம் 10.01.2021-ல் முடிவதாகவும் மேற்படி நிறுவனம் தூய்மை பணியினை எவ்வித புகாருக்கும் இடமளிக்காமல் நல்ல முறையில் செயல்பட்டு வருவதாக தெரிவித்து மேற்படி நிறுவனத்திற்கு மூன்று மாத காலத்திற்கு பணி நீடிப்பு செய்ய சிபாரிசு செய்துள்ளனர்.

மேலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரி நிர்வாக அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்க கால அவகாசம் தேவைப்படுவதால் அவசர அவசியம் கருதியும் பொது மக்களின் நலன் கருதியும் நிர்வாக நலன் கருதியும் தற்போது தூய்மை பணியாளர்களை வழங்கி தூய்மை பணியினை செய்து வரும் வாணியம்பாடி அருணை கம்ப்பியூட்டர் பார்ம்ஸ் நிறுவனத்திற்கு மூன்று மாத காலத்திற்கு 11.01.2021 முதல்10.04.2021 வரை ஒப்பந்த காலத்தை நீடிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1.அனுமதிக்கலாம்

2.பொது சுகாதார பணியின் அவசரம் அவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட அருனை கம்ப்பியூட்டர் பார்ம்ஸ் வாணியம்பாடி தனியார் நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பந்த நிபந்தனைகளின் படியும் இந்நகரமன்றம் தீர்மானம்:162 நாள்:26.12.2019-ன் படி 166 நபர்கள் மூலம் துப்புரவு பணி மேற்கொள்ள மூன்று மாத காலத்திற்கு 11.01.2021 முதல் 10.04.2021 வரை ஒப்பந்தகாலத்தை நீடிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

25. வாணியம்பாடி நகராட்சியில் வார்டு எண்.18 கொல்லர் தெரு, வார்டு எண். 26 கோணாமேடு சமுதாய கூடம் அருகில் மற்றும் BSNL அலுவலகம் எதிரில், வார்டு எண்.28 பெருமாள்பேட்டை, வார்டு எண். 29 நியாயவிலை கடை அருகில், வார்டு எண்.30 மேல்நிலை நீர்தேக்க தொட்டி எதிரில், வார்டு எண்.36 திருமாஞ்சோலை சமுதாய கூடம் பின்புறம் மற்றும் புதூார் இரயில்வே பாலம் அருகில் ஆகிய 8 இடங்களில் அமைந்துள்ள பொது கழிப்பிடத்திற்கு தேவையான தண்ணீர் வசதி, மின்சார வசதி மற்றும் பழுது பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.9.80 இலட்சத்தை நகராட்சியின் குடிநீர் நிதி 2020-21 ஆம் ஆண்டு நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3321/2020/இ1.

2020-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ம் நாள் திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற நகரமன்ற சிறப்பு கூட்டத்தின் நடவடிக்கைகளின் உண்மை நகல்

முன்னிலை : திரு.எஸ்.புவனேஸ்வரன் (எ) அண்ணாமலை
தனி அலுவலர், வாணியம்பாடி நகராட்சி.

வாணியம்பாடி நகராட்சிக்கு சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21–ஆம் ஆண்டின் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.20557/2020/E3, நாள்:15.12.2020–ல் நிபந்தனைகளுக்குட்பட்டு வரபெற்றுள்ள நிர்வாக அனுமதியை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. பணிகள் கீழ்கண்டுள்ளவாறு.

Fund tie-up (Rs. in Lakhs)

| Project cost Rs. | SRP funds Rs. | ULB constribution Rs. | Total Rs. |
|---|---|---|---|
| 275.00 | 247.50 | 27.50 | 275.00 |

| S.No | Name of Works | Pacakge | Length of road (KM) | Width of road ( in m) | Estimate Amount (Rs. in Lakhs) |
|---|---|---|---|---|---|
| 1 | Providing and Laying of Paver Block road at Haji Kulam Extension st in Ward No:04 | I | 0.300 | 3.00 | 10.00 |
| 2 | Providing Paver Block road Construction of strom water Drain & Culvert at P.M.O Cross st in Ward No:04 | | 0.200 | 3.90 | 9.00 |
| 3 | Providing New BT Surface and Construction of strom water Drain & Culvert at P.K.R Colony in Ward No:08. | | 0.250 | 5.00 | 24.00 |
| 4 | Providing Paver Block road at Dokku st & Kollar st in Ward No:18 | | 0.350 | 3.50 | 13.00 |
| 5 | Providing Renewal Surface at Mullah st & Kasai st ,Teachers Colony in Ward No: 24. | | 0.450 | 4.00 | 12.00 |
| 6 | Providing Paver Block road at Konamedu in Ward No:27. | | 0.150 | 3.00 | 6.00 |
| 7 | Providing Paver Block road at Thendral Nagar in Ward No:28. | | 0.250 | 3.50 | 11.00 |
| 8 | Providing and Laying of New BT Surface at College Ground Road,Jeeva Nagar in Ward No: 31. | | 0.200 | 4.00 | 15.00 |
| | **Sub Total** | | **2.150** | | **100.00** |
| 9 | Providing Paver Block road and Construction of strom water Drain at Nainamohammed Kasim New st in Ward No:11 | II | 0.210 | 3.90 | 15.00 |
| 10 | Providing and Laying of New BT Surface Road & Construction of strom water Drain & Culvert at Cross st,Salamabad in Ward No: 15 | | 0.200 | 4.50 | 15.00 |
| 11 | Providing Renewal Surface at Mariamman Kovil st st Perumalpet in Ward No: 28 | | 0.150 | 5.00 | 6.00 |
| 12 | Providing Paver Block road and Construction of strom water Drain & Culvert at Nethaji Nagar,South in Ward No:30. | | 0.400 | 3.70 | 23.00 |
| 13 | Providing and Laying of New BT Surface Road at Narayanaswamy st in Ward No: 33 | | 0.250 | 5.00 | 14.00 |
| 14 | Providing and Laying of New BT Surface Newtown in Ward No: 33. | | 0.250 | 4.50 | 13.00 |
| 15 | Providing and Laying of New BT Surface at Mariamman Kovil st in Ward No: 35. | | 0.250 | 5.00 | 14.00 |
| | **Sub Total** | | **1.710** | | **100.00** |
| 16 | Providing and Laying of Paver Block road and Construction of strom water Drain & Culvert at H.M.O st in Ward No:03. | **III** | 0.450 | 2.90 | 15.00 |
| 17 | Providing Paver Block road near Head Post office in Ward No:06 | | 0.150 | 3.20 | 5.50 |
| 18 | Providing Paver Block road at Alutha Complex in Ward No:13 | | 0.400 | 3.70 | 16.50 |
| 19 | Providing Paver Block road at New Delhi in Ward No:25. | | 0.200 | 3.00 | 14.00 |
| 20 | Providing Paver Block road at Pudur and 5th Cross st Anna Nagar in Ward No: 35. | | 0.300 | 3.20 | 12.00 |
| 21 | Providing Paver Block road and Construction of strom water Drain & Culvert at Thirumancholi in Ward No:36. | | 0.250 | 3.10 | 12.00 |
| | **Sub Total** | | **1.750** | | **75.00** |
| | **GRANT TOTAL** | **3** | **5.610** | | **275.00** |

அ.கு : மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.2951/2020/இ1.

தீர்மானம் எண்.135 அனுமதிக்கப்பட்டது

2. வாணியம்பாடி நகராட்சிக்கு சொந்தமான கோணாமேடு பகுதியில் அமைந்துள்ள சமுதாய கூட கட்டிடம் பொது மக்களின் பயன்பாட்டிற்கு பயன்படுத்திவந்த நிலையில் தற்போது கோவிடு-19 காரணமாக பயன்பாடற்ற நிலையில் உள்ளது. உதவி இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் வேலூர், அவர்களின் கடித எண்:அ1/6388/2019, நாள்:14-10-2020-ம் தேதி வரப்பெற்ற கடிதத்தில் வாணியம்பாடி நகராட்சிக்கு சொந்தமான கோணாமேட்டில் அமைந்துள்ள சமுதாய கூட கட்டிடத்தினை மாத வாடகை அடிப்படையில் வழங்க கோரியதின் பேரில் இந்நகராட்சி பொறியாளர் மூலம் பொதுப்பணித்துறையின் புள்ளி விவரத்தின் அடிப்படையில் மாத வாடகை ரூ.58700/- என நிர்ணயம் செய்து வழங்கியதின் அடிப்படையில் இந்நகராட்சி மூலம் ந.க.எண்.2809/2020/அ1, 11-11-2020-ம் தேதிய கடிதத்தில் மாத வாடகை ரூ.58700/- மற்றும் GST 18 விழுக்காடு ரூ.10566/- ஆக மொத்தம் ஒரு மாதத்திற்க்கு ரூ.69266/- என நிர்ணயம் செய்யப்பட்ட விவரத்தினை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் வேலூர், அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை-32 அவர்களின் கடித எண்:பவ1/15329/2020, 07-12-2020 –ம் தேதிய கடிதத்தில் அரசு அலுவலகங்களுக்கு வாடகை நிர்ணயம் செய்வது குறித்து பொதுப்பணித்துறையினரிடமிருந்து நியாய வாடகை சான்று பெறப்பட வேண்டும். எனவே திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடியில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் அலுவலகம் துவங்க அரசால் ஆணைகள் வெளியிடப்படும் நேர்வில் பொதுப்பணித்துறையால் நிர்ணயிக்கப்படும் நியாய வாடகை சான்றின் அடிப்படையில் அரசுக்கு அனுப்பப்படும் கருத்துருவில் வாணியம்பாடி நகராட்சியால் தெரிவிக்கப்பட்டுள்ள சமுதாயகூடம் மாத வாடகை விவரம் அரசுக்கு தெரிவித்து அரசால் பின்னர் வெளியிடப்படும் ஆணைக்குட்பட்டு மேற்படி வாணியம்பாடி நகராட்சி சமுதாய கூட வாடகை தொகைக்கு இவ்வியக்கக இசைவினை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் வாணியம்பாடியில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் அலுவலகம் துவங்க அரசால் விரைவில் ஆணைகள் வெளியிடப்பட உள்ளது. எனவே, வாணியம்பாடி சமுதாயக்கூடத்தில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மைய அலுவலகம் அமைவதற்கு ஏதுவாக கட்டிடத்தில் உரிய சீரமைப்பு பணிகள் மேற்கொண்டு விரைவில் கட்டிடத்தை ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதவி இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், வேலூர், அவர்களின் கடித எண்:அ1/6388/2019, 09-12-2020-ம் தேதி வரப்பெற்ற கடிதத்தில் வாணியம்பாடி நகராட்சிக்கு சொந்தமான கோணாமேடு பகுதியில் அமைந்துள்ள சமுதாய கூட வாடகை தொகைக்கு இசைவினை தெரிவித்து கடிதம் இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை-32 அவர்களின் கடிதத்தின் வழியாக பெறப்பட்டுள்ளதாகவும், எனவே, வாணியம்பாடி சமுதாயக்கூடத்தில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலகம் அமைவதற்க ஏதுவாக கட்டிடத்தில் உரிய சீரமைப்பு பணிகள் மேற்கொண்டு விரைவில் கட்டிடத்தை ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி வருவாய் ஆய்வரின் 20-10-2020-ம் தேதிய குறிப்பில் மேற்படி சமுதாய கூடத்தினை வாடகை அடிப்படையில் குத்தகை மூலம் ஒப்படைக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளதால் நகராட்சிக்கு சொந்தமான கோணாமேட்டில் உள்ள சமுதாய கூடத்தை பழுது பார்ப்பு பணிகள் மேற்கொண்டு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மைய அலுவலகமாக துவங்க மாத வாடகை அடிப்படையில் ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு : அனுமதிக்கலாம்.

ந.க. எண்:2809/2020/அ1

**தீர்மானம் எண்.136** அனுமதிக்கப்பட்டது